183430

பாரிஸ் சாதந்தள

O-892 B.
N·16
183430

ஸ்ரீரும்பிமச துணை.

3 - 1916
MADRAS

இஃது

பம்பாய் பாரீஸ் கம்பெனியாரும்,

சென்னை ஹிந்து விநோத சபைக்குத் தலைவராகிய

ம-ா-ா-ஸ்ரீ, தி. நாராயணசாமி பிள்ளை யவர்களும்,

N. S. மாணிக்கம் பிள்ளை யவர்களும்;

ஆலந்தூர் பாலவிவேகதாயனி கம்பெனியாரும்,

C. கன்னையா அவர்களும்,

இன்னும் பலவித கம்பெனியார்களும் நடாத்திவரும்

பாரீஸ் சாகுந்தலா

இவை.

ம-ா-ா-ஸ்ரீ, S. கோவிந்தாச்சாரி பிரதம மாணுக்கனுகிய

ராஜபார்ட் பார்வதி மனமோஹன

T .V. மாணிக்கமுதலியாரால்

பாடல்களுக்குறிய வசனங்களை

ஒருங்குசேர்த்து.

ப கு. தாமோதர முதலியாரால்.

சென்னை சூளை

தோண்டைமண்டலம் அச்சுயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு. 1916. இதன் விலை அணா 10

Registered Copy Right.

1948
894·612

ஸ்ரீ

ஸ்ரீஜம்பிகை துணை,

ரிஜிஸ்டர் அரிவிப்பு:

இதனால் யாவருக்குந் தெரிவிப்பது யாதெனில், கஅசூஎ-வது, வருஷத்திற்பிரந்த, உடு-வது ஆக்டின், உஸ-வது - பிரிவினிற்சொல்லிய, சூ-ங அது விதியின்பிரகாரம் இந்த பாரீவ்ஸ சாகுந்தளமென்னும் புத்தகத்தை ரிஜிஸ்டர்செய்யப்பட்டிருக்கின்றமையால் எனது வுத்திரவன்றி அச்சிடக்கூடாது அப்படி அச்சிடுபவர்களை மேற்சொன்ன ஆக்டின் பிரகாரம் வழக்கிடப்படும்.

0-842 B
1926

இப்படிக்கு,

ப. கு. தாமோதரமுதலியார்.

☞ பாரீவ்ஸ சாகுந்தள புத்தகம் வேண்டியவர்கள் சென்னை-சூளை, விஜய விக்நேஸ்வரர் கோவில் தெருவு 65-வது நெ. தொண்டைமண்டலம் அச்சுக்கூடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

183430
சென்னை-600 008



உ

தேவிதுணை.

பாரீஸ் சாகுந்தள.

(1) சீன் தேவேந்திரன் சபை,

பாரீஸ்-டான்ஸ் - தாளம் - ஆதி-துரிதம்.

1. சுரபதி சுகுமாரனே சுரதசீல சுகிரத பிரபாவகுண
 வாக்கியம் ருதுவசன சீரதிலோலா (சு)

நரபதியோர்புகழ் நாடும்பிரபோதா
நளினவஜீசர நருமணர்பாதா
சநிசநிசா நிதநிதபா தபதபமா பமபமகா
மகரி கரிசஸாஸா ரிஸாநிதப மகரிஸா
தாதரிகிடதக நக,தரிகிடதக தித்லாங் தித்லாங்தா
தித்திலானகிடநக தரிகிடதக தாதாதா தாதாதா
நலமார்வுலாச பலமார்விலாச (சுர)

தேவேந்திரன், வ-ம்.

சபையோர்களே நானிருக்கும்படியான சிம்மாசனமாகப் பட்டது என்னை உட்காரச்செய்யாமல் அக்கினிஜ்வாலை வீசுகின்றது அதனை தெரிவிப்பீர்கள்.

சூரியன், வ-ம்

தேவராஜா விஸ்வாமித்திரர் கொடூரமான தவம் புரிகிறார் அதனால்தான் அக்கினிஜ்வாலை வீசுகிறது.

தேவேந்திரன், தரு.

நாமேமகமது-என்ற-வர்னமெட்டு.

2. யாரைக்கொண் டிந்தகாரியம் செய்யலாம்
 உரைசெய்வீர் தேவரே.

என்செய்வே னிதற் கெவரைநானும் அனுப்புவேனையோ
ஏதோ என்மனம் வேம்பிவேம்பிவாடி ஏக்கமுண்டாகுதே
ஏற்றுக்கொள்வா ரொருவருமில்லையே எனை ஏங்கச்செய்யாமல்

தேவேந்திரன், வ-ம்.

அந்த விஸ்வாமித்திரருடைய தவத்தை அழிக்கச் சக்தியுள்ளவர்கள் [illegible] யாரேனிலும் என்னிடம் தெரிவியுங்கள்.

வருணன், வ-ம்.

தேவராஜ விஸ்வாமித்திரருடைய தவத்தை அழிக்கவேண்டுமென்றால் நமது சபையிலிருக்கப்பட்ட ஸ்ரீரத்தினங்களைக்கொண்டு அழிக்கச் செய்யலாம்.

தேவேந்திரன்-தரு-பாரீஸ்-தாளம்-ரூபகம்.

3. சபையோரே கேளீர் யான் சொல்வதை
 சமயத்திலேயார் வுதவிசெய்வீர் (சபை)

இதோ எனைவாட்டுதே என்செய்குவேன்
 கௌசிகன் தவத்தை அழிப்பாருண்டோ
சொல்லிவிட்டாலெ ஆவி செல்லுமினி
 செய்வதேதோ காணகிலேன். (சபை)

தேவந்திரன், வ-ம்.

விஸ்வாமித்திரருடைய தவத்தை அழிக்க சக்தியுள்ளவர்கள் இந்த தட்டிலுள்ள தாம்பூலத்தை எடுத்துக்கொள்வீராக

மேனகை-தரு, பாரீஸ்-தாளம்-ஆதி.

4. தேவ தேவாதியே நானே செல்குறேன் செல்குறேன்
 சென்றிதோ வெல்குறேன் (தேவ)

ஆவலாய் கௌசிகர் தம்மிடம் சென்றுயான்
ஆயாசமின்றி யவர் மாய வலையில்பட
ஐந்துவித ஆலிங்கனம் விந்தையாய்ப் புரியச்செய்வேன்
அன்றே தவம் குன்றும்படி ஆக்குவேன் (தேவ)
மூவராகிலு மென் யாவராகிலு மென்
மோகத்தால் சிக்கியவர் யாகங் குலைந்திடவே
மூன்றுவித தந்திரத்தால் மூழ்கச்செய்து வந்திடுவேன்
முன்னே எந்தன் சாமார்த்தியம் காட்டுவேன் (தேவ)

மேனகை, வ-ம்.

தேவராஜ விஸ்வாமித்திரருடைய தவத்தை அழிக்க இப்போது யான் செல்லுகிறேன்.

சபை, வசனம்.

கல்யாண் கல்யாண் கல்யாண்

(2) சீன் விஸ்வாமித்திரர் தவம்

மேனகை-தரு, வ-ம்

5 மாரன்கணையினால் வாடுறேன் மாதுநானின்றேஇன்றே
 கார்மார்குழல் சோருதே காதல்மிக மீருதே
 நிரமன்றி வாடுதே தென்றல் புலி சீருதே (மா)

இந்த நல்வனத்தினில் இனங்குவோரைக் காணேனே.
அந்தமிகும் வனத்திலே அங்குற்றோரை தோணேன்.

இவ்விடத்தில்-ஆதி-தாளம்-பாரிஸ்.

பாருமையா இதுவே நற்காலமே
பருவத்தில் கலந்தாலல்லோ சுகம்
சோருதென் ஆவியும் ஓஹோஹோ பாவியும்
வாளிதூவுறான் மதன் மாவரளியினால் (பாரு)

அச்சம்இனிமேல் என்னமோ வுன்னுசை சகியாள்
ஆவல்கொண்டேனின்றே என் அற்பமதாய்
எண்ணுதென்னை நேசமதாய் இணங்கிடாதே
இதோநானும் வுயிர்விட்டால் என்செய்வேனையோ
ஏனின்னம் சுந்தரா மவுனமதாய் நீ
வாகாய்கண்மூடி கொள்ளாமல் சேருமினி. (பாரு)

விஸ்வாமித்திரர் வ-ம்.

வாருவாய் மாதே.

விஸ்வாமித்திரர் வ-ம்.

ஆஹா! என்னகாரியம் செய்துவிட்டோம் இதுகால பரியந்தம் செய்த தவமெல்லாம் பாழாய்விட்டதே ஏழை மதியாலிப்படி தெரிந்திருந்தால் இப்பேர்ப்பட்ட காரியத்தில் பிரவேசிக்கமாட்டாய்.

மேனகை குழந்தையை,

விஸ்வாமித்திர ரிடத்தில் காண்பித்தல்.

விஸ்வாமித்திரர் வ-ம்.

சே! சே!! மூர்கி எட்டி நில்.

(3) சீன் வேட்டை.

துஷ்யந்தன் பாரீஸ்-தரு-தாளம்-ஆதி.

6 விந்தைய மானிதோ பேயுதே
அதி வேகமாக ஆஹா! ஹா!!

அதிவேகமாக மாரி பூரி கானகத்தில் ஆஹா! ஹா!!
அது எங்கும்சென்றது எங்குசென்றனன்
கானகத்தில் காணேனே
கைசோருதினி மெய்வாடுதினி என் சாரதிபிடி ஆஹா! ஹா!!
சுற்றினை எற்றினை துடிக்கவேகொல்லுகிறேன்
சுருக்குடன் செல்வாய் ஆஹா! ஹா!!



துஷ்யந்தன்-தாளம்-ஆதி.

7. என்ன அதிசயம் ஒருமானெனே அலேபச்செய்திதோ
இதை ஒருகொடியினில் இன்றேயான் விழச்செய்வேன்(என்)

இனிரதமதை விரைவாகவே கானில்சாரதி ஏகச்செய் (என்)

சாரதிபாரிதோ வேகமாய்மானினே கூடுதேநாடுதே
பாயுதே இந்தநல் அம்பினுல்கொல்லுவே நில்லடா (என்)

(4) சீன் வைகாசர் ரிஷி, வ-ம்.

ஓ! ஓ! இது ஆஶிரம இளமானுனது இதைக்கொல்லவேண்டாம்! கொல்லவேண்டாம்!! புஷ்பக் குயில்களின்மேல் நெருப்பை போடுவதுபோல் மிருதுவான இந்த இளமான்மேல் பாணத்தை போட்டுக் கொல்லவேண்டாம்! கொல்லவேண்டாம்!! ஐயோ; மிருதுவான இந்த இளமான்களுடைய உயிர்களெங்கே தீட்சணமாயும் வச்சிராயுதம்போல் வலவுபெற்ற உம்முடைய பாண்ங்கள் எங்கே அந்த பாணத்தை அம்புறாதூணிக்குள் போட்டுவிடும். புருவ வம்சததில் பிரந்தமன்னவர்கள் ஆயுதம் வகிப்பது ஆபத்துக்குள்ளானவர்களைக் காப்பாற்றுகிறதற்கேயொழிய குற்றமற்றவர்கள் அடிப்பதற்கல்லவா.

துஷ்யந்தன் வ-ம்,

தமது வாசாபின்படி பாணத்தை பிரதி ஊரம்செய்துவிட்டேன் குற்றம் குற்றம்.

வை-ரிஷி-வ-ம்.

புருவ வம்சத்துக்கு விளக்குபோன்ற நீர் இப்படிச் செய்வது மிக நியாயமே இச்செய்கையானது புருவ வம்சத்தில் உதித்த உமக்கு மிகத்தகுதியாயிருக்கிறது ஆனல் இப்பேர்ப்பட்ட நற்குணங்களோடு கூடிய சக்கிரவர்த்தியான ஒரு புதல்வனே நீர் அடைவீராச.

துஷ்யந்தன் வ-ம்.

மஹா பாக்கியம்.

வை-ரிஷி-வ-ம்.

இதோ மாலினி நதிக்கரையில் எங்கள் குலக் குலபதியாகிய கண்வமஹாரிஷியான ஆஶிரமம் இருக்கிறது உமக்கு வேறுகாரியத்துக்கு பாதகம்வராதபட்சத்தில் இந்த ஆஶிரமத்திற்குப் போய் அதிதிபூஜை பெற்றுக்கொள்ளலாம் விக்கினமில்லாமல் சரிவர நிறைவேறிக்கொண்டிருக்கிறதைக்கண்டு வில்லின் நாண் உராய்ந்து காய்

துப்போன உம்முடைய புஜமானது எவ்வளவு தூரம் பூமையைப் பரிபாலனம் பண்ணிக்கொண்டுவருகிற தென்பதையும் நீர் அறிந்து கொள்ளலாம்.

துஷ்யந்தன் வ-ம்.

சுவாமி உங்கள் குலக் குரு இப்பொழுது ஆஸிரம்மத்தில்இருக்கிருரே.

வை-ரிஷி-வ-ம்.

அதிதிகளை யெல்லாம் உபசரிக்கும்படி தன் பெண்ணுகிய சகுந்தலைக்கு கட்டளையிட்டு எங்கள் குருவானவர் அவளுக்கு இடையூறு செய்கிற தேவதையை ஆராதனம்பண்ணிச் சந்தோஷிப்பிக்கிறதற்காக ஸோமதீர்த்தத்துக்கு போயிருக்கிருர் யான் சென்றுவருகிறேன் நீர் அவ்விடம் செல்லுவீர்.

துஷ்யந்தன் வ-ம்.

சாரதி ரதத்தை சீக்கிரமாக நடத்து புண்ணியமான ஆசிரமத்தைக்கண்டு நம்மைப் பரிசுத்தப் படுத்திக்கொள்வோம்.

துஷ்யந்தன் வ-ம்.

சாரதி ஒருவரும் சொல்லாமலே இது தபோதவனமென்று யான் தெரிந்துக்கொண்டேன் பார்த்தனையா.

சாரதி வ-ம்.

அதெப்படி என்ருலோ.

துஷயந்தன் வ-ம்.

உனக்கு தெரியவில்லையா இதோபார் கிளிகள்வசிக்கிற மரப்போந்துகளிலிருந்து நீ வாரதானியங்கள்சிதரி மரத்தடிகளில் விழுந்துகிடக்கின்றனபார், இதோ ஒரு இடத்தில் கிடக்கும் மணிபுங்கப் பழத்தை நசுக்கினதினுல் எண்ணை கசிவாய்யிருக்கின்றதுபார், இதோ மான்களெல்லால் இரதத்தின் சப்தத்தைக்கேட்டு தங்களை அடிக்க மாட்டார்களென நம்பிக்கையினுல் பயந்து ஓடாமல் நின்றுக்கொண்டிருக்கின்றனபார், ஸ்நாநம் பண்ணப்போகிற வழிகளிலெல்லாம் மரவுரிகளின் துணியால் ஓடிவரும் ஜலம் தாரைதாரையா விழுந்திருக்கின்றனபார், கரையோரங்களில் வசிக்கிற மரங்களின் வேர்களெல்லாம் காற்றிலசையும் வாய்க்கால் ஜலத்தால் அலசப்பட்டுக்கொண்டிருக்கின்றனபார், ஹோமப்புகையால் மரத்தளிர்களின் நிறமெல்லாம் மங்கிப்போயிருக்கின்றதுபார், அன்றியும் நிலங்களில் மிருதுவான மான்குட்டிகளெல்லாம் இதோ நிர்பயமாய் அங்குமிங்கும் ஓடித்திரிந்துக்கொண்டிருக்கிறன பார்த்தனையா.



சாரதி. வ-ம்.

எல்லாம் தெரியவருகிறது.

துஷ்யந்தன், வசனம்.

சேனைத்தலைவா இப்போது ரிஷிகள் ஆசிர்மத்தருகில் வந்திருக்கிறோம் இங்கு கூச்சல்கூடாது மேலும் மிருகங்கள் சினைப்பாராட்டும் மாடவியா இந்த ஆசிரமத்தில் வசிக்கும் ரிஷிகளை நான்போய் தெரிசித்துத் திரும்பிவருவதாக்குள் குதிரைகளை எல்லாம் தேய்த்து சித்தப்படித்திவை.

சாரதி. வ-ம்.

அப்படி செய்குறேன்.

(5) சீன் நந்தவனம்.

தயாவதிபீனு-என்ற-வர்ணமெட்டு-தாளம்-ஆதி.

சாகுந்தள, தரு.

மஹாவதிகுண மாதரேவேகமாய்
மனோரம்மியமாய் வருவீர்சுகமாய் (மஹா)

தோழி.

பிரியசகுந்தலா சலம்வார்க்கவே நீ
போகவேவருவோம் புகழினி

சாகுந்தள.

வினைதமுருமாதலைமா மரம்பூஞ்செடிகளுக்கே நீ
ஜலம்வார்த் திடவே

தோழி.

விரைவுடன்நடப்பாய் பிரியநாயகியே
விலாசமொழியார் சகுந்தளா

சாகுந்தள.

தயாவதிகளே தாமதம்என்னடி
சரேலெனவேநீ வருவீர்விரைவாய்

தோழி.

சமயமிதுவே நாம்பலருங்கூடியே
சம்ரமாய்பேசியே போவோமடி

சாகுந்தள வ-ம்.

அடி தோழிகளா நந்தவனத்தில் புஷ்பித்திருக்கும் மலர்களை பரிப்போம் வாருங்கள்.

எதியாமேஹிமேதன்-என்ற வர்னமெட்டு,

சாகுந்தள.

9 மலர்பறிப்போம்வாரீர் சகிமாரே மகிழ்வாய்
மாவனமதில் மங்கையரே யிங்கிர்தமாய் சங்கையின்றிகூடி.

தோழி.

சிதராமல் ஒவ்வொருமாலராக சேர்ந்துநாம்
பரிப்போமே செல்லுவீர் தோழியரே
செழுமையான காவில் சீக்கிரமாகயின்று (மலர்)

சாகுந்தள.

மல்லிமுல்லை யிருவாக்ஷி செண்பகமா
மலர்களும்.

தோழி.

மாதேநாங்கள்பரித்திதோ வந்தோமே பாருயடி
பிரியசகுந்தள வாருய் பிரியமாக
ஜலம்பறப்பவே. (மலர்)

அனுசூயை, வ-ம்.

சகி சாகுந்தள அப்பா கண்ணுவர் உன்பேரில் வைத்திருக்கிற பிரியத்தைகாட்டிலும்ஆவிரம மாங்களிடத்தில் அதிக பிரியம்வைத்திருக்கிறுயென்று எண்ணுகிறேன் அதுவுந்தவிர தாதனமாய் புஷ்பித்த மல்லிகைப் பூப்போல் மிருதுவான சரீரத்தோடுகூடிய உன்னை இம் மாங்களின் பாத்தியில் ஜலம்வார்க்க கட்டளையிட்டு யிருக்கிறுரல்லவா

சாகுந்தள, வ-ம்.

அடி தோழி அனுசூயா இச்செடிகளுக்கு தண்ணீர் ஆற்றுகிறது தந்தையினுடைய கட்டளை என்பதுமட்டுமல்ல இயல்பாகவே எனக்கும் என்னுடன் பிறப்புபோலாகிய இவற்றினிடத்தில்எனக்கு மிக்க நேசமுண்டாகிற தென்பது உனக்குத்தெரியும்.

துஷ்யந்தன்-வ-ம்-தனி.

இங்கு நுழைகிலே தானே மனதுக்கு மிக்க ஆருதலுண்டாகிறது களிமணப்பெண்டீர் கிடைப்பாளென்று என் நிக்ஷயத்தினால் தெரியவருகிறது நல்லது இங்கு என்னென்ன நடக்கிறதோ மறைவாக நின்றுபார்ப்போம்.

சாகுந்தள-வ-ம்.

அடி தோழி என் மரவுரி கஞ்சுகத்தைப் பிரியம்வதை சற்றேனும் இரக்கமின்றி இவ்வாறு இருக்கக்கட்டியிருக்கிறுள் நீ யிதைச் சற்றே தளர்த்திவிடுவாய்



பிரியம்தனு-வ-ம்.

என்னை நோவதேன் தினந்தோறும் பெருகச்செய்கிற உன் யெவனத்தை நொந்துக்கொள்.

துஷ் மோகி-தா-ஆதி-தனி.

10. மதியோ வதன மிவள் ரதியோ சுகம்
மயில்போல்நடையாளிவளை கூடமனம்
நாடுதிந்த மாவனமதில்

ஆரோ யிவள் குயிலேன மொழிபுகல்மாது
ஆஹா முனியிவரின் மகளாமோ அரியேன்
இந்த அரிவை எனையுமிந்தசமயம்
ஆதரிப்பாளோ சகியிவள் (மதி)

பாரிலுள்ளமாத ரிவளுக் கிணையல்ல
பார்த்தரியேனே பதைக்குதேனே
பரிவாய்இந்த ஒருவிணம் மதங்கணையினுல்
பாயுதே யிவளைகாடவே (மதி)

துஷ்யந்தன்-வ-ம்-தனி.

ஆ! இந்த மரவுரியானது இந்தப் பெண்ணின் இளம்பிராயத்துக்குத் தகாததா யிருந்தாலும் இவளுடைய அழகைக் குறைக்காமல் அதிகரிக்கும்படியே செய்கிறது பார் ஏனென்றுல் தாமரை மலரானது பாசிகொத்தால் சூழும்படி இருந்தாலும் அழகை குன்றுமல் யிருக்கிறது இவள் அழகை யாரையொப்பிடலா மென்றுலும் இவள் அழகுக்கு யாரும் நிகரில்லை இவள் கூந்தலானது மேகத்தை ஒப்பிடாமென்றுல் மேகம் நீலமேக சாப்பில்வர்ணமாய் யிருப்பதால் அதுவும நிகராகாது இவள் புருவத்திற்கு சந்திரனை ஒப்பிடலாமென்றுல் தேய்வுகுணமுண்டு இவள் புரவத்திற்கு தசரதசக்கிரவாத்தி திருக்குமாரனுகிய ஸ்ரீ ராமபிருன் கோதண்டத்திற்கு ஒப்பிடலாமென்றுல் அதில பதினுறுமணிகள் கட்டியிருப்பதால் அதற்கு நிகராகாது இவள் மார்புக்கு தங்ககலசங்களை ஒப்பிட லாமென்றுல் கலசங்கள் டளபளப்பாயும் ஒரேநிரமாய் யிருப்பதால் யிவள்மார்பில் நரம்புகள் படந்திருப்பதால் அதுவும் நிகராகாது யிவள் யிடுப்பிற்கு | தாமரைகமலத்தை ஒப்பிடலாமென்றுலும் கமலம் பிரிவாய் யிருப்பதினுல் அதுவும் நிகராகாது இவள் அன்னனடையும் அழகு பொருந்திய துடையும் பின்னல்கொடியும் மின்னனல்ளொளியும் நேர்த்தியே நேர்த்தி யிவ்வொன்றினிடைச் சினேகமசெய்ய என் மனம் கவர்ந்து நாடுகிறது ஏனென்றுல் இவள் மரவுரி அணிந்திருந்தாலும் அழகாய்யிருக்கிறது இயற்கையினுல் அழகுள்ள உருவங்களுக்கு அழகில்லாத வஸ்துவும் அழகாவே யிருக்கிறதல்லவா.

சாகுந்தள, வ-ம்.

அம்மா நான் என்னை மரப்பினும் மரப்பேனே யல்லாது யிக்கொடியை என்றுப் மரவேன் இந்த வசந்தருவில் இம்மாமரமும் மல்லிகைகொடியும் ஒன்ரேடொன்று கூட்டுறவால் இணைந்து தழுவிவிந்தையைபார்த்தயோ மல்லிகையின் புதுமலரானது இளங்காதலியையும் மாவின் இளந்தளிரானது அதற்கேற்த ஆருயிர்காதலியும் போல இன்புற்றிருக்கின்றன.

பிரியவதை, வ-ம்-தனி

அனுஸூயா சாகுந்தள பார்த்தனையா அவள் மாமரத்தோடு நிற்கும் நேர்த்தியை பார்த்தனையா.

அனுஸூயை,- வசனம்.

அடி பிரியவதா நான் பார்த்துக்கொண்டேன்.

பிரியவதை, வசனம்.

அம்மா நீர் முகர்த்தகாலமுற்றும் நீர் அங்கே நிற்கவேண்டும் ஏனென்றால் அதன் சமீபத்தில் யிருக்கையில் அந்த கேசரமரமானது ஒரு கொடியோடு சேர்ந்திருக்கிறதுபோல் தோற்றுகிறது.

சம்-சும்-பியாரி-என்ற-வர்னமெட்டு-பாரீஸ்-தா-ம்-ஆதி.

துஷ்யந்தன், தனி.

11. இங்கென் கண்முன்னே நிற்குமிந்த மாதரசே
எவ்வுலகமோ அரியேன் ஆஹா! ஹா

ஏதுலாவும்மடமயி லிவள்தானோ
எங்கும் நின்று பரீக்ஷிக்குமீனோ
ஏதெனசொல்லுவேன் மாதுயிவள் தன்னையே
மதனைப்படைத்தயிந்த வர்மமோ யாரறிகுவார் (இங்)

தாதுலாவும் சுகவனந்தனி லேனோ
தங்கினதே ஒயிலாகயேனோ
ஏதுகாரணமோ யானரியேனிவள்
ஆரென அரிந்திடுவோம் அஞ்சிடாமல்வஞ்சிதனை (இங்)

துஷ்யந்தன், வ ம்-தனி.

சரி, இன்னம் இங்கே என்ன நடக்கிறது உற்றுப் பார்ப்போம்.

அனுஸூயை, வ-ம்.

தோழி, பிரியவதா ஏன் சாகுந்தள அந்த மல்லிகைகொடியை ஆவலோடு பார்த்துக்கொண்டு நிற்கிறாள் பார்த்தனையா.

பிரியவதை, வ-ம்.

எனக்கு ஒன்றுந்தெரியவில்லையே உனக்கு தெரிந்தால் சொல்லு?

அனுஸூயை, வ-ம்.

இந்த கொடி மல்லிகை என்னும் மல்லிகைக்கொடிக்கு தகுந்த மரம் கிடைத்திருக்கிறதுபோல் தனக்கு தகுந்த நாயகன் கிடைக்க மாட்டாரா என்று எண்ணிக்கொண்டிருக்கிறாள்.

சாகுந்தள, வ-ம்.

பெண்ணே இது உன் நினைப்பு உன் உள்ளத்தை நீயே இப்போது வெளியிட்டதுபோ லாயிற்றது.

துஷ்யந்தன், தாளம்-ஆதி-தனி.

12. நாணுசரித்துபோ லென்னுயகியும் பிரியமாக எனையும்
எனை நாடுவளோகாணேன் மாவனமதில்பிரியமாகவே எனையும்
தேனமர்க்குழலாள் மாது என் தியானமே கொள்ளாமநிற்கிறாள்
இவள்செய்வதே நானே மாவனமதில் பிரியமாகவேஎனையும்
என்னுடனே பேச அஞ்சினாலும் சொல்வதெல்லாம் விடாமலே
[கேழ்க்குறாள்
இவளின்பமுறும் பார்வை என்மீதிலேதான் பிரியமாகஎனையும்(நா)

துஷ்யந்தன், வ-ம்-தனி.

ஓ! மனமே நீ திடங்கொள் எதை கிட்டச்சேராத நெருப்பென்று நினைத்தாயோ அதுவே சுடரொளி மாணிக்கமாய்விட்டது மனமே திடங்கொள்.

நந்தவனத்தில்-சாகுந்தளயை-வண்டு அடிக்குதல்.

சாகுந்தள, வ-ம்.

ஆ! இந்த வண்டானது நம்மை மோதவருகிறதே.

தாளம்-ஆதி.

13. கிட்டவந்துமோதுதடி எட்டிஎட்டிப் பாயுதடி
துஷ்டவண்டுதானீதடி தோழியரே என்செய்குவேன்
கெட்ட கரும்பூச்சுதடி தூ! தூ!!
கேடுவரக் காலமடி
ஆருந்துணையில்லையடி அண்டிஎன்னைக்கொல்லுதடி
கூருகெட்ட வண்டுதடி சீ! சீ!!
மாரிமாரி பாயுதடி. (கிட்ட)



சாகுந்தள, வ-ம்.

ஹா! தோழிமாரே இக்கொடியவண்டு இங்கு வந்து என்னை வருத்துகிறதே நீங்கள் இதை சற்றே தூரத்திவிட்டு என்னை இதின் உபத்திரவத்தி னின்று விடிவியுங்கள்.

துஷ்யந்தன், வண்டை-துறத்தல்-தாளம்-ஆதி.

14. சீ! செல்லுவாய் செல்லுவாய் செல்லுவாய் செல்லுவாய்
கொடியகருவண்டே
சேசே போவாய் செடிகளை தாவாய்
சீக்கிரமாகயிவ் வனம்விட்டே (சீ!)
மதேர்கள் தம்மை வுபத்திரவம்செய்ய நீதியா
மோயின்று பேதைமாரை
விலகிசெல்லாவிடில் வீன்பதிசாரும்
மாவனம்விடுத்து வேரிடம்செல் (சீ!)
துஷ்—வீணுக மடிவாய்யினி
பிரி—அனு சரியல்ல கொல்வது
துஷ்—வேதனை செய்வதாலே
பிரி—அனு பொருளல்ல வுமக்கிது
துஷ்—விடுவிடு யிதைக்கொல்லுவேனே (சீ!)

துஷ்யந்தன், வ-ம்.

துஷ்டநிக்கிரகம் செய்துவருகிற புருவவம்ச மன்னன் இப்பூமியை ஆண்டுவருகையில் ஆசிரமத்திலுள்ள பேதையான பெண்களிடத்தில் துஷ்ட தனம் செய்கிறவன் யாரடா?

அனுவஸூயை, வ-ம்.

ஐயா, யாதொன்றும் பயமுமில்லை எங்கள்பிரியசகியாகிய சாகுந்தளையை வண்டு அலட்டினதால் அவள் மிரண்டு பயந்து விட்டாள்.

துஷ்யந்தன் வ-ம்.

பெண்களோ உங்களுக்கு ஒரு குறைவுவராது காப்பது என்னையொத்தகடன் நீங்கள் அஞ்சவேண்டாம்:

துஷ்யந்தன், வ-ம்.

உங்கள் தவத்திற்கு ஒன்று மிடையூறில்லையே.

அனுவஸூயை, வ-ம்.

எங்களுக்கு அதெல்லாம் ஒன்றுமில்லையே.

துஷ்யந்தன், வ-ம்.

அதுதான்-சரி.

அனுஸூயை, வ-ம்.

இப்போது மேன்மைதங்கிய அதிதிகிடைத்ததினால் எங்கள் தவமெல்லாம் சரிவர நடந்துவருகிறது. ஐயா, உனக்கு நல்லவரவு கூறுகிறோம் அடிதோழி சாகுந்தள நீ ஆசிரமத்திற்குசென்று அதிதி பூஜைக்கேத்த வஸ்துக்களை எடுத்துக்கொண்டுவா; இங்கிருக்கும் ஜலத்தை அதிதிக்கு உபயோக படுத்திக்கொள்ளலாம்.

துஷ்யந்தன், வ-ம்-தனி.

ஏ ! சுந்தரி மாரனானவன் என்னையும் வருத்துவதோடு உன்னையும் வருத்திகொண்டே யிருக்கிறான்.

துஷ்யந்தன், வ-ம்.

தித்திக்கும் செந்தேன்காள் நீங்கள் அகங்குளிர்ந்து முக மலர்ந்து இனிதுபேசினதே அதிதி பூஜையிலும் பதின்மடங்கு அதிக பூஜைபெற்றதுபோ லானேன்.

பிரியவதை, வ-ம்.

ஐயா, குளிர்ந்த நிழலுள் மரத்தின் கீழுள்ள மேடையில் நீர் தயவுசெய்து அமர்ந்து சிரம பரிகாரம் செய்துக்கொள்ளும்,

துஷ்யந்தன், வ-ம்.

தித்திக்கும் செந்தேன்களா நீங்களும் மரத்துக்கு ஜலம் ஊற்றி நீங்களும் களைப்புற்றிருக்குறீர் நீங்களும் அமருங்கள்.

சாகுந்தள, வ-ம்-தனி.

இதென்ன ஆச்சரியம் நான் இவரை கண்டது முதல் தவத்திற்கு முற்றுவதிடையாய் என்மனது விகாரப்படுகிறதே.

அனுஸூயை, வ-ம்.

தோழி சகுந்தளா அதிதிகள் செல்லுக்கிணங்கி அவர்க்கு மரியாதைசெய்வது நம்மை பொருத்தகடமை நீயும் இவ்விடத்தில் அமரு.

பிரியவதையும், அனுஸூயை, வ-ம்-தனி.

அனுஸூய இந்த அதிதி யாரா யிருக்கலாம்.

அனுஸூயை, வ-ம்.

இவரை பார்த்தால் ராஜவம்சமாய் யிருக்கலாம் விசாரிப்போம்.

அனுஸூயை, வ-ம்.

ஐயா, தாங்கள் யார் இந்த அழகுபொருந்திய சரீரத்தை ஆசிரமத்திற்கு வருவதினா லுண்டாகிய சிரமத்துக்கு உட்படுத்திருக்கிறீர்.

சாகுந்தள, வ-ம்-தனி.

மனமே சஞ்சலப்படாதே உன் எண்ணத்தை உன் இன்னுயிர் தோழியாகிய அனுஸூயா வெளியிடுகிறாள்.

துஷ்யந்தன, வ-ம்.

யான் புருவம்சத்தில் உதித்த அரசனால் தன்னுடைய தர்மாதி காரியத்திற்காக நேமிக்கப்பட்ட நான்ஆசிரமத்தில் வாசம்செய்பவர் அவர்கள் தர்மகாரியங்கள் விக்னமன்றி நடாத்திவருகின்றனவா தெரிந்துக்கொள்ள இந்த தபோதவனத்திற்கு வந்திருக்கிறேன்.

அனுஸூயை, வ-ம்.

சரி, அப்படியானால் தர்மத்தை ஆசரித்து வருகிறவர்களுக்கு இப்பொழுது நாதன் ஏர்ப்பட்டுவிட்டார்.

அனுஸூயை. வ-ம்.

அடி தோழி சாகுந்தள அப்பா கண்வர் இந்தசமயம் இங்கே யிருந்தால்.

சாகுந்தள, வ-ம்.

அவர் யிருந்தால் என்ன ஆகுமென்கிறீர்கள்,

அனுஸூயை, பிரியவதை, வ-ம்.

இந்த அதிதிக்கும் தன் உயிருக்கு உயிரான வஸ்துவைகொடுத்து உபசரிப்பார்.

சாகுந்தள, வ-ம்.

உங்கள் மனதில் ஏதோ ஒரு எண்ணம் குடிகொண்டிருக்கிறதென்று காண்கிறது அதை நான் கேளேன்.

துஷ்யந்தன், வ-ம்-தனி.

இப்போதுதான் இவள் மீது ஆசைவைக்க தாராளமாக இடமுண்டாயிற்று இன்னம் ஒன்று கேழ்ப்போம்.

துஷ்யந்தன், வ-ம்.

அம்மா உங்கள் தோழிக்கு மன்மதவியாபாரம் உண்டா.

தோழிகள், வசனம்.

ஐயா, அதெல்லாம் ஒன்றும் கிடையாது.

துஷ்யந்தன், வ-ம.

ஆனால் ஜலக்கிரீடை முதலான சிங்கார லீலைகளும் இடங்கொடாததும் கந்தமூலாதிகளை புசித்து காலங்கழிக்கவேண்டிய இந்த

வைகானஸ் விருதத்தை உங்கள் தோழி தனக்கு விவாகம் ஆகிர வரையில் அனுஷ்டிக்கப் போகிறாளா? அல்லது அழகிய கண்ணை யுடைய இந்த மாது பாணிக்கிரஹணம்மான பின்னும் இந்த எதிரில் சஞ்சாரஞ் செய்துக்கொண்டிருக்கிற பெண்மான்களோடு கூட ஜீவ காலமெல்லாம் சஞ்சாரஞ்செய்யப்போகிறாளா.

பிரியவதை, வ-ம்.

ஐயா, தருமத்தை அனுஷ்டிக்கும் விஷயத்திலும் இவன் பிரா தீனையா யிருக்கிறாள். அதனால் இவளுடைய தகப்பனார் கண்வர் தகுந்த வரனைத்தேடி இவளைப் பாணிகிரஹம் செய்துக்கொடுக்க வேண்டுமென்றே யெத்தனித்திருக்கிறார்

சாகுந்தள, வ-ம்.

அனுஸூயா நான் ஆசிரமத்திற்கு போய் பிரியவதை பண்ணு கிற பரிகாச வார்த்தைகளையெல்லாம பூஜையை யாகிய அம்மை கௌதமியோடு சொல்லுகிறேன் பார்.

அனுஸூயை, வ-ம்.

தோழி சகுந்தளா நீ போவது நியாயமல்ல.

சாகுந்தள, வ-ம்.

என்ன காரணத்தினால் நீ என்னைப்பார்த்து நீ போவது நியாய மல்ல என்கிறாய்.

பிரியவதை, வ-ம்.

தோழி சகுந்தலா நாம் பேசிக்கொண்டபடி நீ இன்னம் இரண் டும் மரங்களுக்குத் தண்ணீர் ஊற்ற கடமையிருக்கிறது அந்தக் கடனை தீர்த்துவிட்டு போவாய்.

துஷ்யந்தன், வ-ம்.

அம்மா ஏற்கனவே மரங்களுக்குத் தண்ணீர் ஊற்றினதினால் இந்தப் பெண்களைப் புற்றிருக்கிறாளென்று எனக்கு தெரிகிறது இதோபார் தண்ணீர்க்குடைத்தைத் தூக்கினதால் இவள்இருதோள் பட்டைகளும் நழுவி இரண்டு உள்ளங்கைகளும் செக்கச் செவேலெ ன்று செவந்திருக்கின்றன பார் இப்போதுகூடவே பெருமூச்சுவிட் டுக்கொண் டிருப்பதனால் இவள் இரண்டு மார்புகளும் மேலும் கீழுமாய் போய்க்கொண்டிருக்கின்றனபார் இவள் அலங்காரமாக் கா தில் அணிந்திருக்கும் சிரீஷி புஷ்பமானது கீழேசிதராமல் ஒட்டிக் கொண்டு முகமெல்லாம் பொட்டுப் பொட்டாய் வியர்த்திருக்கிறது பார் கட்டியிருந்த தலைமயிர் அவிழ்ந்தபோது அவள் ஒரு கைகளால் சேர்த்து கட்டாததால் தலைமயிரும் அலங்கோலமாய் அலைகிறது

பார் மேலும் அம்மா உங்கள் தோழி கொடுக்கவேண்டிய கடனை யான் தருகிறேன் இந்த மோதிரத்தை பெற்றுக்கொள்ளும்.

அனுசூயை, பிரியவதனு, தர்க்கம்.

பாரீஸ்-தாளம-ஆதி.

அனுஸூயை—ஆஹாயிவர் யார்
மாதே யிவர்தான் மஹாராஜாவோ, அரியேன் (ஆஹா)
பிரிய—ஆமாம் உண்மையே உண்மையே அனுஸூயா (ஆஹா)
துஷ்யந்தன்—ஏனில்மாதர்களே ஏனின்னம் சந்தேகயா
எனை மஹாராஜனென்று
சொல்லுவா ரெங்குந்தானே (ஆஹா)
அனுஸூயை—மோதிரத்தை வாங்கவும்சரியா
பிரியவதை—சாகுந்தள தீர்த்தாலெனை கடனை
அனுஸூயை—சரிசரி வாவாகுமரியே
சாகுந்தள—அனுஸூயா யானென்ன செய்யவோ
அனுஸூயை—ஓ! சுந்தரியே இராஜனுக்கு
உபகாரமே புரிந்தார் (ஓ! சுந்)

இரண்டு-தோழிகள், வ-ம்,

பிரியவதை, வ-ம்,

அனுஸூயா இந்த மோதிரம் யெவ்வளவு நேர்த்தியாயிருக் கிறது பார்த்தனையா?

அனுஸூயை, வ-ம்.

பிரியவதனு யான் பார்த்தேன் இதின் மேல்புரத்தில் வெட்டி யிருக்கும் எழுத்தைப் பார்த்தனையா?

பிரியவதை, வ-ம்.

அதில் என்னயிருக்கிறது!

அனுஸூயை, வ-ம்.

துஷ்யந்த மகாராஜாயென்று வெட்டியிருக்கிறது.

துஷ்யந்தன், வ-ம்.

அம்மா! நீங்கள் என்ன யோசிக்கிறீர்கள் அது என்னுடைய மோதிரம் தான் நீங்கள் ஏதுக்கும் அஞ்சவேண்டாம்.

பிரியவதை, வ-ம்.

ஆனால் இது அரசனுடைய கையைவிட்டுப் பிரியதகாது நீர் சொன்ன வார்த்தையினால் இவள் கொடுக்கவேண்டியகடன் தீர்ந்து விட்டது.

துஷ்யந்தன்-வ-ம்-தனி.

நான் இவள் விஷயத்தில் நேசிப்பதுபோல் ;இவள் என்விஷயத்தில் நேசமாய்யிருப்பாளா அப்படி சந்தேகப்படுவானேன் என் எண்ணம் நிறைவேருவதற்கு இடம் யிருக்கிறது ;மேலும் அவர்களிடம் நாம் பேசும் காலத்தில் அவள் கலந்து பேசாவிட்டாலும் நாம் பேசுகிறவார்த்தை செவிகொடுத்துகேட்கிருள் அதல்லாமல் நம்மைஉற்று பார்க்கிருள் இவள் என்ன சாடைகள் காண்பிக்கிருள் பார்க்கலாம்.

சாகுந்தள. வ-ம்.

என் இன்னுயிர்த் தோழிகாள் நீங்கள் என்னை யென்னசெய்யச் சொல்லுகிறீர்கள் ஆஸிரமத்திற்கு அனுப்புகிறீர்களா அல்லது என்ன தெரிவிக்கப்போகிறீர்கள்.

தோழிகள், வ-ம்.

அப்படி ஆஸிரமத்திற்கு யேகலாம்.

பிரியவதனு-வ-ம்.

அனுசூயா நாமெல்லோரும் இவ்விடம் வந்து நேரமாய்விட்டது நாம்போகலாம் வாருங்கள்.

அனுஸூயை, வ-ம்.

பிரியவதனு இந்த உயிருக் குயிரான அதிதிக்கு தெரிவித்து போவோம் வாருங்கள்.

தோழிகள்; வ-ம்.

ஐயா ! நாங்கள் வந்து நேரமாய்விட்டது நாங்கள் ஆஸிரமத்திக்கு செல்லுகிறோம்.

துஷ்யந்தன் வ-ம்.

ஹா ! இதென்ன வெகு துலவில் கோஷ்டம் கேழ்க்கிறதே கவனிப்போம் நம்மை சைனியங்கள் தேடிகொண்டு தபோதவனத்திற்கு வருகிருப்போல் காண்கிறது அவர்கள் இவ்விடம் வருவதற்குள் நாம் நேரில் கானலாம்.

தோழிகள், வ-ம்.

ஐயா ! தங்களுக்கு அதிதி பூஜை சரியாய் செய்யாதபடியால் மறுபடியும் எப்போது பார்க்கப்போகிறோம். அதை, தெரிவிக்களங்களுக்கு லஜ்ஜையாய்யிருக்கிறது.

துஷ்யந்தன், வசனம்.

மருபடியும் இப்படி இந்த வார்த்தை தெரிவிக்கவேண்டாம்.

தோழிகள், வ-ம்.

அடி சகி சாகுந்தள, நாம் ஆஸிரமத்திற்கு போகலாம் வருவாய்.

சாகுந்தள, வ-ம்.

அனுஸூயா இளங்குசப்புல்லின் ஊசிபோன்ற கூர்னுனித் தாளொன்று என் காலில் தைத்தது அதை எடுத்துவிட்டு வருகிறேன்.

ஷை, -வ-ம்.

அனுஸூயா என் மரவுறி ஆடையிந்த மாருதானி முள்ளில் மாட்டிக்கொண்டது நான் னிவற்றை மெள்ள யெடுத்துவிட்டு வருமளவும் எனக்காக நீ சற்று காத்திருந்து உந்தன் கூட அழைத்துக்கொண்டு போவாய்.

துஷ்யந்தன். வ-ம்,

இவள் தவஜமானது எதிற்காற்றிருக்கு முன்னே சென்றுலும் அதில் காட்டியிருக்கும் மெல்லிடைபட்டு சீலையானது பின்செல்வதுபோல் என் திரேகமாத்திரம் பிறஜைகளைக் காணும்பொருட்டு சென்றுலும் என் மனமானது அவள் பின்பற்றுகிறதே

* (6) மாடவியன்-சீன்

பாரீஸ்-தாளம்-ஆதி.

16. தண்ணில்லாமல் நான் வாடுறேன்
தாகத்தாலே தேடுறேன்
தனிமையாய் நின்று நொந்தேனே
தருணத்தில் ஒருவரைக்காணேனே (தண்)
பாழானமன்னன் மானின் பின்போனன்
பாதங்கள்நொந்து பதைக்கிறேனின்று
மானின் போன வள்ளலைக்காணேன்
வர்மமே ஆஹா! கர்மமோ ஓஹோ ! ! (தண்)

மாடவியன், வ-ம்.

ஐயோ ! வேட்டையில் பைத்தியம் பிடித்திருக்கிற இந்த ராஜனுக்கும் சிநேகிதனுய் யிருந்தும் யான் நாசமாய் போகிறேனே அதுவும் தவிர மான்களும், பன்றிகளும், கரடிகளும், யானைகளும் இதுகளெல்லாம் கூட்டங் கூட்டமாய் ஓடுகின்றன. இதுவு மல்லாமல் இலை உதிர்ந்திருக்கிறதனுல் நிழலைத்தராத மரங்களுள்ள கானகத்தின் வழியாய் வேனிற்காலத்தில் மத்தியானவேளையிலும் சுற்றித் திரியவேண்டியதாய் இருக்கிறதே சருகுகள் உதிர்ந்து கிடக்கிறதனுல் ருசிகேட்டு வெது வெதுப்பாய்க்கிடக்கிற மலையரு கருவிகளின் ஜலத்தை சாப்பிடவேண்டியதாய்யிருக்கிறது. அதுவும் தவிர ஈட்டிமுனையால் குத்தி நெருப்பில் சுடப்பட்ட மாமிசத்தையே விசேஷமாய் வேளையில்லா வேளையில் சாப்பிடவேண்டியதா யிருக்கிறது பகற்காலத்தி லெல்லாம் குதிரையின்பின் ஓடி! ஓடி! என் தேகத்திலுள்ள மூட்டுகளெல்லாம் விட்டுவிட்டுப்போய் யிருக்கிறது இதுவும்



தவிர எனக்கு நல்ல நித்திரைகிடையாது ஒரு சமயம் சற்று நித்திரைசெய்தால இந்தச் சண்டாள வேடுவுமக்கள் தங்கள் நாய்களோடு காட்டை வளைக்கிறதற்காகப் போடுகிற கூச்சலினுல் அதிகாலையிலே என்னை எழுப்பிவிடுகிறார்கள் துன்பம் இவ்வளவோடு நிற்கவில்லையே. நென்னப் பிளவினமேல் ஒரு சின்னப்பிளவை புரப்பட்டாப் போல் யிருக்கிறது, நேற்று நாங்களெல்லோரும் பின் றங்கியிருக்கும்பொழுது நம்முடைய அரசன் வேட்டையாடிக்கொண்டே போய்க் காசிபர் ஆஸிரமத்தில் நுழைந்து சாகுந்தள என்னும் பெண்பாலை என் துற்பாக்கியத்தினுல் கண்ட அதுமுதல் இராஜ்யத்திற்கு போகவேண்டுமென்கிற எண்ணம் கிடையாது அப்படியிருக்கையில் நாம் இவ்விடமிருந்து காக்குவதில் என்ன பலன் கமது இராஜ்யத்திற்கு செல்வோம்.

துஷ்யந்தன், வ-ம்.

ஆ! மாடவியா என்உன் முகம்சோர்ந்து கருகிப்போயிருக்கிறது.

மாடவியன், வ-ம்.

ஐயா! ஒருவன் தானே தன்விரலினுல் கண்ணை குத்திக்கொண்டு கண்ணில் நீர்வருவதேன் என்று கேழ்க்கிறதுபோல் கேழ்க்கிறீர்கள்.

ஷை. வ-ம்.

நீர் இராஜ்ய காரியங்களை யெல்லாம் விட்டுவிட்டு வேடன்போல் அபாயமான இந்த காட்டு பிரதேசங்களில் இந்தமாதிரி திரிந்துக் கொண்டிருக்கிறீர் நானும் பிரதிதினம் காட்டு மிருகங்களைப் பின்தொடர்ந்து ஓடுவதால் என் அவயவங்களெல்லாம் மூட்டுவிட்டு போய் விட்டது நான் இராஜ்யத்திற்கு செல்லுகிறேன் தாங்கள் வருவதற்கு தடை என்ன.

ஷை, வ-ம.

தாங்கள் மனதில் ஏதோநினைத்து யோசித்துக்கொண்டிருக்கிறதுபோல் தெரியவருகிறது. யான் தெரிவித்ததெல்லாம் காட்டில் அழுதஅழுகைப்போல் வீணாய்போய்விட்டதென்றுயோசிக்கிறேன்.

துஷயந்தன் வ-ம்.

மாடவியா யான் போய்வந்த சங்கதி விசாரியாமல் வீண்வார்த்தைகளை பேசுகின்றனை.

மாடவியன், வ-ம்.

பேரீச்சம் பழத்தைத் தின்று தெவிட்டிப்போன ஒருவனுக்கு புளியம்பழத்தில் ஆசை உண்டாவதுபோல் அந்தப்புரத்திலிருக்கிற சிறந்த ஸ்திரீகளை அனுபவித்த உமக்கு காட்டிற்பிறந்து வளர்ந்த இப்பெண்ணிடத்தில ஆசை வந்திருக்கிறது.

துஷ்யந்தன், வ-ம்.

நீ அந்தப் பெண்ணைப் பார்க்காததனுலல்லவா இம்மாதிரி பேசுகின்றனை,

மாடவியன், வ-ம்.

நீர்கூட இவளைக்கண்டு மயங்குகிறபடியால், அவள் அழகுள்ளவளாய்த்தான் இருக்கவேண்டும்.

துஷ்யந்தன் வ-ம்.

மாடவியா அவள் அழகை என்ன சொல்லுவேன்! ஒருவராலும் அனுபவிக்கப்படாத நிகரற்ற அழகுபொருந்திய இந்தப் பெண்ணை முகரப்படாத புஷ்பத்துக்கும், நகங்களால் கொய்யப்படாத தளிருக்கும், வச்சிர ஊசியால் செதுக்கப்படாத இரத்தினத்திற்கும், உருகிபார்க்கப்படாத புதிதான தேனுக்கும் ஒப்பிடலாம் முன் ஜன்மத்தில் செய்த தவத்தின் பயனெல்லாம் ஒன்றுகூடி உருவெடுத்ததுபோலிருக்கிற இக்கன்னிகையை அனுபவிக்கிறதற்கு பிரம்மதேவன் எந்த மஹாநுபாவனை ஏற்படுத்தி யிருக்கிறாரோ எனக்குத் தெரியவில்லை.

துஷ்யந்தன்-வ-ம்.

சிநேகிதா, நான் அதிகமாய்ச் சொல்லுவானேன்? இந்தப் பெண்ணினுடைய அவயவங்களெல்லாம் சரியாய் அமையும்படி பிரம்மதேவன் இவளைச் சித்திரத்தில் எழுதி, பிறகு உயிரைப் புகவிட்டாரோ அல்லது உலகத்திலுள்ள சந்திரன் தாமரைப்பூ முதலான அழகான வஸ்துக்களையெல்லாம் கருவியாகக்கொண்டு மனதினாலேயே இவளைச் சிருஷ்டித்தாரோ அல்லது நிகரற்ற இவளுடைய சவுந்தரியத்தையும், அப்ஸர ஸ்திரீ முதலான அழகிய பெண்களைக்காட்டிலும் மேலான அழகிய ஸ்திரீகளைச் சிருஷ்டிக்கத்திறமை யில்லாத பிரம்மதேவருடைய சக்தியையும் யோசித்துப்பார்த்தால் இந்தப் பெண்ணை இப்பிரம்மதேவன் சிருஷ்டிக்கவில்லையோ என்றும் நினைக்கவேண்டியதா யிருக்கிறது,

மாடவியன். வ ம்.

அதெல்லாம் இருக்கட்டும்! இப்போது என்னயோசிக்கிறீர்.

துஷ்யந்தன், வசனம்.

மாடவியா யான் ஒன்று யோசிக்கவில்லை இன்றைய மூன்றும் நாள் உபவாஸமிருந்து மறுநாள் பாரணை பண்ணப்போகிறேன் அன்றையதினம் சிரஞ்சீவியாகிய நீவந்து இருக்கவேண்டும் என்று மாது ஸ்ரீ அம்மாள் உத்தரவு அனுப்பியிருக்கிறார்கள் மேலும் இருஷிகள் உபத்திரவம் மேலும் மாது ஸ்ரீ அம்மாளுடைய வார்த்தையும் தட்டக்கூடாது மாடவியா யான் சொல்வதைகவனிக்கவும்.

(மாடவியன், வ-ம்.) அப்படியே.

துஷ்யந்தன், வ-ம்.

மாடவியா உன்னை மாது ஸ்ரீ அம்மாள் பிள்ளையைப்போல் பாவித்து யிருக்கிறார் அல்லவா அப்படியிருக்கையில் நீ இராஜ்யத்திற்கு

போவாய் இருஷிகளுடைய காரியத்தை நான் செய்யவேண்டியவனாயிருக்கிறேன் என்பதை தெரிவித்து மாது ஸ்ரீ அம்மாளுக்கு புத்திரஸ்தானத்தி லிருந்து நடத்தவேண்டிய காரியங்களை யான் யிருந்து நடத்தினதுபோல் தயவுசெய்து நடந்துக்கொள்ளவேண்டும்.

மாடவியன், வ-ம்.

அப்படியே! தங்கள் சொற்படி நடந்துக் கொள்ளுகிறேன்.

துஷ்யந்தன் வ-ம்.

மாடவியா நமது சபனங்களை அழைத்துக்கொண்டு சீக்கிரமாய் போய் சேரவேண்டும் யான் செல்லட்டுமா. மாடவியா இன்னுமொரு சங்கதி நான் போகிறது ருஷிகளின் பொருட்டு தெரியுமா.

மாடவியன், வ-ம்.

தாங்கள் சீக்கிரமாக செல்லுங்கள் ருஷிகுமாரத்தியாகிய சாகுந்தள எதிர்நோக்கியிருப்பார்கள்.

துஷ்யந்தன், வ-ம்.

மாடவியா மறுபடியும் அதேமாதிரி நினைத்துக் கொண்டனையா மஹாரிஷிகளுடைய வார்த்தையை தட்டக்கூடாதென்றே நான் தபோதவனம் போகிறேன் அந்த ருஷிகுமாரத்தி சாகுந்தளயிடத்தில் கிஞ்சிற்றேனும் பிரியமில்லை என்பது உனக்குத்தெரியும் இதோ பார் நாகரீகம்போற் நாமெங்கே! மான் பேடுகளோடு காட்டில் வளர்ந்து மன்மதவியாபாரம் என்பது இன்னதென்றும் தெரியாத நாகரீக மற்ற பெண்ணை இச்சிப்பேனென்று நினைக்கின்றனையா! அப்படி எண்ணவேண்டாம் யான் செல்லட்டுமா.

(மாடவியன்-வ-ம்) அப்படியே செல்லுங்கள்? யானும்போகிறேன்.

துஷ்யந்தன், வ-ம்-தனி.

என் பிராணநாயகியை மறுபடியும் பார்க்கிறதைக் காட்டிலும் வேறு ஆறுதல் என்ன இருக்கிறது? ஆகையால் அவளைத் தேடிப் போகிறேன். ஆகாசத்தில் சூரியனைப்பார்க்க இப்பொழுது மத்தியானகாலம் வந்துவிட்டது. வெயிலோ அதிகமாய் தகிக்கிறது இந்தச் சமயமதில் சாகுந்தளை தன் தோழிகளோடு மாலினீதீரத்தத்திலுள்ள லதாகிருஹங்களில் அநேகமாய் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கலாம். ஆகையால்; நான் அந்த இடத்தையே நோக்கிப்பார்க்கலாம் இந்த இடத்தில் காற்று என்ன சுகமாய் வீசுகிறது! மாலினீ நதியின் ஜலத்துளிகளை வாரி இறைத்துக்கொண்டு செந்தாமரை மலர்களின் சுகந்தத்தோடு வீசுகிறஇந்த மந்தமாருதத்தை மன்மதபாணத்தால் நொந்துகிடக்கிற எல்லா அவையவங்களோடும் கட்டி அணைத்துக்கொள்ளலாம்போலிருக்கிறது இதோ எதிரில் தெரிகிற நீரொச்சியால் அமைக்கப்பட்ட லதாமண்டபததில் சாகுந்தள கட்டாயம் இருப்பாள். ஏனெனில் இதோ இந்த லதாமண்டபத்தின் வாசற்படி

யிலிருக்கிற வெள்ளை மணலில் முன்புறம் உயர்ந்தும் நிதம்ப பாரத்தினால் பின்புறம் அழுந்தியும் இருக்கிற காலடிகள் புதிதாய் தெரிகின்றன. ஆகையால்; நான் இந்த மரக்கிளைகளின்பின் மறைந்துகொண்டு பார்ப்போம் ஹா! எனக்கு நேத்திரா னந்தம் இப்பொழுதுதான் உண்டாயிற்று. இதோ! என் பிராண நாயகியானவள் ஒரு பளிங்குக் கல்லின்மேல் புஷ்பங்களைப் பரப்பி அதன்மேல் படுத்துக்கொண் டிருக்கிறாள். அவள் சமீபத்தில் இரண்டு தோழிகளும் உட்கார்ந்து அவளுக் குபசாரம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் இருக்கட்டும், இவர்கள் ஏகாந்தமாய் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சற்று பொருத்துப்பார்ப்போம்.

சாகுந்தள, வ-ம்.

அடி தோழி அனுஸூயா என்னுடைய திரேகம் அனலாய் வீசுதடி. என்னால் சயிக்கவில்லையே,

(7) சாகுந்தள, நந்தவன-சீன்.

சாகுந்தள, விரகவேதனை-பாரீஸ்-தாளம்-ஆதி.

17. இனி ஏதுநான் செய்குவேனே
எழில் பாங்கிமார்களே
எனதிருக்கையும் அனலாகவீசுதடி (இனி)
கனிபோல் மொழியும் குளருதிவ்வேளை
கண்களிரண்டும் சோருதே
இதன்கருத்தரியே னென்செய்வேன்தோழியரே (இனி)
சரியாகுமோ நான் படுத்துயருமக்கே
சகியேனென்செய்வேனே இதைஎன்
சரீரம்வெளுத்தும் குறைவாகுதடி (இனி)

அனுஸூயை, பிரியவதை, வ-ம்.

அம்மா! தோழி, நாங்களிருவரும் தாமரை தளிரால் வீசுவது அந்தக் காற்று உனக்கு சௌக்கியமாய் யிருக்கிறதா.

சாகுந்தள, வ-ம்.

பிரிய சகிகளே; எனக்கு, நீங்கள் வருந்தி வீசுவதினால் பயனென்ன

துஷ்யந்தன், வ-ம்-தனி.

அழகிய இந்தச் சாகுந்தளைக்கு திரேகம் மிகவும் அசௌக்கியமாய் இருக்கிறதாகத் தெரிகிறது இது வெய்யிலில் போவதினாலோ அல்லது காம நோயினாலோ என்று எனக்குச் சந்தேகமாயிருக்கிறது அதைப்பற்றி யான் சந்தேகப்படுவானேன் ஏனெனில் இவள்மார்பில் விலாமிச்சை வேர்வைத்துக்கட்டி இருக்கிறது கையில ஃபோட்டிருக்கிற தாமரைத்தண்டால் செய்த கங்கணமும் துவண்டு தொங்கிக்



கொண்டிருக்கிறது இம்மாதிரி நிலைமையில் கூட இவள் சரீரம் மிகவும் அழகாயிருக்கிறது. கிரீஷ்மகாலத்துக்கு மத்தியானவெயிலிலும் காமநோயும் சிறியபெண்களுக்கு உஷ்ணத்தைஉண்டுபண்ணிஅசௌக்கியத்தைச் செய்கிறதாயிருந்தாலும். கிரீஷ்மகாலவெயிலானது இந்த மாதிரி பெண்களுடைய அழகைக் குறைக்காமலிருக்கிறதில்லை.

பிரியவதை, வ-ம்-தனி.

அடி ! அனுஸூயா, இராஜரிஷியைக் கண்ட நாள்முதல் நமது தோழியாகிய சாகுந்தள நோயால் திரேகமெலிந்து அவஸ்த்தை படுகிறாள் அடி அனுஸூயா ஒரு சமயம் அவர் நிமித்தம் இவளுக்கு நோய் வந்திருக்கலாமோ.

அனுஸூயை, வ-ம்.

அடி ! தோழி, பிரியவதா நானும் அவரால் தான் வந்ததென்று யோசிக்கின்றேன். இப்போது நம்து தோழியாகிய சாகுந்தளை மனதில் என்ன எண்ணங்கொண்டு யிருக்கிறாள் என்று, தெரிந்துக்கொள்வோம் வா !

துஷ்யந்தன் வ-ம்.

பிரியவதை வாஸ்தவத்தைச் சொல்லுகிறாள், ஏனெனில், இவளுடைய கன்னங்கள் மிகவும் ஒட்டிப்போயிருக்கின்றன, பார்புகளும் தளர்ந்துபோயிருக்கின்றன. இடுப்பு முன்னிருந்ததைக்காட்டிலும் மிகவும் மெலிந்திருக்கிறது தோள்பட்டைகள் மிகவும் சரிந்திருக்கின்றன,தேசமெல்லாம் வெளுத்துப்போயிருக்கிறது இம்மாதிரி காமநோயால் வருந்துகிற இந்தப் பெண்ணைப்பார்த்தால் அலகோலமாய் யிருக்கிறாள் அதுவுமல்லாமல் மரத்தினுடைய இலைகளெல்லாம் காய்ந்து வெளுத்து மந்த மாருதம் வீசுவதினால் துளிர்க்கும் தருணத்தி லிருக்கிற மல்லிகைக் கொடியைக் காண்பதுபோல் மனதுக்கு வருத்தமும், சந்தோஷமும் உண்டாகின்றன.

அனுஸூயை, வ-ம்.

அம்மா, சாகுந்தள நாம் மன்மத வியாபாரம் இன்னதென்றும் தெரியாதவர்களல்லவா மேலும் நோயால் வருந்துகிறவர்களுடைய நிலமைப்பற்றி இதிகாசங்களில் எப்படி வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போல், உன்னுடைய திரேக நிலமை எங்களுக்கு தெரிகிறது. உன்னுடைய திரேகநிலமையை அச்சமில்லாமல் தெரிவிக்கவேண்டும், ஏனெனில் வியாதியின உண்மை தெரியாமல் சிகிச்சைசெய்ய ஆகாதல்லவா.

சாகுந்தள, வ-ம்-தனி.

நமது ஆசை தலைமட்டங் கொண்டுபோகிறது நமது தோழிகளுக்கு தெரிவித்து விடலாம் என்னசெய்யப்போகிறாள் பார்ப்போம்.

சாகுந்தள, வ-ம்.

நான் படுகிற வருத்தத்தை உங்களோடு தெரிவிக்காமல் யாரோடு தெரிவிக்கப்போகின்றேன் அரசனைக்கண்டது நாள்முதல் எனக்கு அதுவே தியானமாய் நாளுக்கு நாள் இளைத்துப்போகிறேன்,

பிரியவதை, வ-ம்

துளிர்த்த மல்லிகைக்கொடியைஅணைய தேமாமரத்தைத் தவிர வேறு எந்த மரம் நான் பாத்திரமானதடி ?

(அனுஸூயை, வ-ம்.) அடி பிரியவதா அவர் எங்கேயிருப்பார்?

(பிரியவதை-வ-ம்.) எவர் எங்கே யிருப்பாரோ !

சாகுந்தள, வ-ம்.

அடி சகி அனுஸூயா நான் எப்படி யாகிலும அந்த அரசனை அடையும் விதம் நீங்கள் செய்யா விட்டால் நான் வுண்மையாக என் உயிரை விட்டுவிடுவேன்.

(அனுஸூயை, வ-ம்.) அடி பிரியவதா இதற்கு என்னயோசனை.

(பிரியவதை, வ-ம்.) அடி அனுஸூயா நமது தோழியாகிய சாகுந்தளை அந்த ராஜனிடத்தில் தனக்கிருக்கும் ஆசையைக்குறித்து ஒரு கவி எழுதட்டும் நாம் அவரைத்தேடி கொடுக்கலாம். அப்போது தான், இந்த எண்ணம் நிறைவேறும்.

(சாகுந்தள, வ-ம்) நான் சற்று யோசித்து சொல்லுகிறேன்.

சாகுந்தள, வ-ம். அடி அனுஸூயா எனக்கு தெரிந்தமட்டும் பாடுகிறேன். அவர் என்னை எங்கே வெறுத்து விடுகிறாரோ.

துஷ்யந்தன், வ-ம்-தனி.

அடி பயந்த பெண்ணே அவன் உன்னை அலட்சியம் பண்ணுவானென்று நீ அஞ்சுகிறாயோ அவர் உன்னை எப்பொழுது கூடுவேனென்று காத்துக்கொண்டு இதோ நிற்கிறேனே. உலகத்தில் ஒருவன் சிரீதேவியை விரும்பினால் அவனுக்கு அவள் கிடைத்தாலும் கிடைப்பாள் அல்லது கிடையாமல்போனாலும் போய்விடுவான் சிரீதேவியே ஒருவனைத்தேடிப் போகும்பட்சத்தில் அவளுக்கு அவன் கிடைக்காமலிருப்பானா.

பிரியவதை, வ-ம்.

அடி சாகுந்தள ஏன் நீயே உன்னைப்பற்றி இகழ்ந்து பேசிக்கொள்ளுகிறாய் உலகத்தில் யாராவது ஒருவர் தன் தேகத்துக்கு சௌக்கியத்தைக் கொடுக்கும் சரத்கால சந்திரிகையை துணியால் மறைத்து தடுப்பாரா,

சாகுந்தள, வ-ம். பிரியவதா தங்க ளிஷ்டப்படி கவி எழுதுவதற்கு எதில் எழுதுவது.

பிரியவதை, வ-ம். அடி சாகுந்தலா உனது சுண்டுவிரல் நிகத்தால் கண்களில் யிட்டிருக்கும் மையைத்தொட்டு எழுதிவிடு.

சாகுந்தள, கவி.

18. உன்னிதயம் நானறியேன் வுன்னிடத்தே ஆசையுற்ற
என்னுருப்பை எல்லாம் இதக்குகிறான் இரக்கமிலனாகி
மன்னனும் இரவும்பகலும் வதக்கு கிறான்
மன்னவனே மாரன்வலிந்து.

(துஷ்யந்தன், வ ம்.) நாம் அவர்கள் அரிகில் செல்லுவோம்.

பிரியவதை, வ-ம்.

ஹா! கும்பிடப்போனதெய்வம் குருக்கே எதிர்த்தாப்போல் தாங்கள் வந்துவிட்டீர் இதனைப் பெற்றுக்கொள்ளும்.

துஷ்யந்தன், வ-ம்-தனி.

ஹா! இப்போதுதான் என் மனது திடமாயிற்று அரிகில் தாராளமாய் போகலாம். மெலிந்த தேகத்தையுடைய பெண்ணே மன்மதன் உனக்கு தொந்தரவு செய்கிறான் இப்பொழுது என்னையும் தகித்துக்கொண்டு யிருக்கிறான் பகற்காலமானது சந்திரனுடையஒளியை மயங்கச்செய்து அது இருக்கிற இடம் தெரியாமல் செய்துவிடுகிறது ஆனால் அல்லிக்கொடியை வாடி வதங்கமாத்திரம் செய்கிறது பார்.

பிரியவதை, அநுஸூயை, வ-ம்.

எங்கள் பிரியமுள்ள ஆரியரே எங்கள் பேரில் தயவுகூர்ந்து இந்தக் கல்லின்மீது அமருங்கள்.

(துஷ்யந்தன், வ-ம்.) அம்மா நீங்களும் அமருங்கள், யானும் அமர்ந்தேன்

துஷ்யந்தன், வ-ம்.

நீ வருத்தப்பட்டு எழுந்திருப்பதை நிறுத்து! பெண்ணே, உன்னுடைய அங்கங்களிலெல்லாம் நீ படுத்திருக்கிற படுக்கையின் புஷ்பங்களெல்லாம் ஒட்டிக்கொண்டிருக்கிறது. மேலும், நீ அணிந்திருக்கும் தாமரைத் தண்டுகளெல்லாம், அதிக உஷ்ணமாயிருக்கிற உன்னுடைய திரேகங்களின்மீது வாடி வதங்கி, அவைகளுக்கு வாசனையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட திரேகங்களை ஆயாசத்துக்குள்ளாக்கி எனக்கு நீ உபகாரம் பண்ணுவது சரியல்ல!

அநுஸூயை. வ-ம்.

அடி பிரியவதா நாம் இவ்விடம் யிருப்பது அவர்களுக்கு லஜ்ஜையாயிருக்கும், நாம் அந்தப்புரம் போவோம்

(பிரியவதையும், வ-ம்) அடி அநுஸூயா போகலாம் வருவாய்.

சாகுந்தள, வ-ம்-தனி.

• பார்த்தவர்களின் மனதைமயக்கும் கண்ணையுடைய பெண்ணே' என் மனதைவிட்டு நீங்காதிருப்பவளே, உன்னைத்தவிர வேறு ஒருவரையும் நினைக்காத என் மனதை நீ வேறாக நினைத்தாயானால், ஏற்கெனவே மன்மதனுடைய பாணத்தால் அடிபட்டு நொந்திருக்கிற நான் மறுபடியும் அதிகத் துன்பத்தை யடையலானேன்,

பிரியவதை, வ-ம்.

அடி அநுஸூயா, இதோ இந்த இளமான்குட்டியானது மனவருத்த முற்று, மிரள விழித்து இங்கும் அங்கும் தன் தாயைத் தேடிக்கொண்டிருக்கிற. நாம் போய் அதன் தாயினிடத்தில் கொண்டுவிடுவோம் வா!

(சாகுந்தள, வ-ம்.) தோழிமாரே 'என்னைத் துணையின்றி தனியாய்விட்டுப் போகிறீர்கள் இருவரில் ஒருவர்பே னாலாகாதா.

அநுஸூயை, பிரியவதை, வ ம்.

உலகத்துக்கெல்லாம் அதியாயிருக்கும் அரசன் உன்சமீபத்தில் இருக்கும்போது உனக்கென்ன பயம்.

துஷயந்தன, வ-ம்.

நீ வருத்தப்படுவதை நிறுத்து பெண்ணே உனக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்கிறவன் உன் சமீபத்திலேயே இருக்கிறேனே குளிர்ந்த காற்றுப் படும்படி வீசி உன் சிரமத்தைப் போக்கடிக்கட்டுமா? அல்லது அடி, அழகிய கண்களுடையாளே. தாமரை மலர் போல் சிவந்த உன் இரண்டு பாதங்களையும் என் மடியில் வைத்து உனக்கு சிரமம் தீரும்படி பிடிக்கட்டுமா?

சாகுந்தள, வ-ம்.

நான் மரியாதை செய்யவேண்டியவர்களை எனக்கு மரியாதைசெய்யும்படி செய்து என்னை அபராதத்துக் குள்ளாகமாட்டேன்.

துஷ்யந்தன், வ-ம்.

பெண்ணே நீ தெரிவித்த வார்த்தையினால் என் சிரமபரிகாரம் தீர்ந்துவிட்டது. என்பிராணநாயகி உன்னுடைய திரேகத்தை மெலிந்துபோகும்படி செய்யவேண்டாம் எனக்கு முத்தம் கொடுப்பாய் என் கண்ணே!

சாகுந்தள-வ-ம்.

நாதா முத்தம் கொடுக்கும்படி தெரிவிக்கிறீர் முத்தம்கொடுக்கும்பொழுது யாராகிலும் பார்த்துவிட்டால் என்ன சொல்லுவார்கள்.



துஷ்யந்தன் வ-ம்.

அடி ! என்பிராணநாயகி நீ பயப்படவேண்டாம் தாய் தந்தை முதலான பெரியோர்கள் உன்னைக் குற்றஞ்சொல்லுவார்கள் என்கிற உனக்கு பயம்வேண்டாம் பூஜ்யராகிய கண்வமகாரிஷி சகல தருமங்களையு நன்றாய்க் கற்றுணர்ந்து இருக்கிறபடியால், இந்த சமாசாரத்தைக்கேட்டு உன்பேரில் குற்றஞ்சொல்லமாட்டார். ஏனெனில், அநேக ராஜரிஷிகளின் கன்னிகைகள் காந்தர்வ விவாகமுறைப்படி விவாகம் செய்துகொண்டிருக்கிறதையும், அவர்கள் பெற்றோர்கள் அதை அங்கீகாரம் பண்ணியிருக்கிறார்களல்லவா உனக்குதெரியவராதா?

சாகுந்தள, வ-ம்.

நாதா உமக்கு வருத்தம்வரக்கூடாது இதோ, முத்தம் தருகிறேன்.

துஷ்யந்தன், வசனம்.

பெண்ணே உனது இஷ்டம்போல் நடந்துக்கொண்டனை இன்னம் சில சமாச்சாரம் தெரிவிக்கிறேன்.

(சாகுந்தள, வ-ம். நாதா) தாங்கள் தெரிவித்தால் கேழ்க்கிறேன்.

துஷ்யந்தன், வ-ம்.

ஒரு வண்டானது புதிதாய் மலர்ந்த மிருதுவான புஷ்பத்தில் தேனைக்குடித்து தன் தாகத்தைத் தீர்த்துக்கொள்வதுபோல். ஒருவராலும் அனுபவிக்கப்படாத உன் அதரத்தை உனக்கு வலியுண்டாகாதபடி பானம்பண்ணி என் தாகத்தைத் தீர்க்கவில்லையே.

சாகுந்தள, வ-ம்.

நாதா அதற்கு என்னதடை நாம் அந்தப்புரம் சென்றுவருவோம், செல்லுங்கள்.

துஷ்யந்தன்-வ-ம்.

இப்போதுதான் எனக்குநேத்திரானந்தம் உண்டாயிற்று.

சாகுந்தள. வ ம்.

[illegible]தா ! தாங்கள் ராஜ்யஞ் செல்லும்போது என்னையும் அழைத்துப்[illegible]ாகவேண்டும்.

துஷ்யந்தன் வ-ம்.

பெண்ணே! யான் ராஜயஞ்செல்லும்போது உன்னை அழைத்துக்கொண்டு போவதற்கு தடை ஒன்றுங்கிடையாது நான் உன்னைத் தனியாய் அழைத்துச்சென்றால், ராஜயத்திலிருக்கும் குடிகள் கேவலமாய் நினைப்பார்கள் யான் ராஜயஞ்சென்று சயனியங்கள் அனுப்புகிறேன் அவர்கள் உன்னை அழைத்து வந்தால் எனக்கு கௌரவம் உனக்கும் கௌரவமாயிருக்கும்.



சாகுந்தள. வ-ம்.

பிராணநாதா உன்னைவிட்டு எப்படி பிரிந்திருப்பேன் தாங்கள் ராஜ்யம் சென்றபிரகு ராஜ்யகாரியத்தில் என்னை மரந்துபோய் விட்டால் என்னசெய்கிறது, தங்கள் சயனியங்களை அனுப்புவதற்குளத்தனை நாள் செல்லுமோ உமமைவிட்டு எப்படி யிருக்கப்போகிறேன்,

துஷயந்தன் வ-ம்.

பிராணநாயகி வருத்தப்படாதே யிதோ என்கையில் அணிந்திருக்கும் மோதிரத்தில்அடையாளமாக வெட்டியிருக்கும் ஒரு எழுத்தை நாள் ஒன்றுக்கு எண்ணி முடிவதற்குள் சயினியங்களை அனிப்பி அழைத்துக்கொள்ளுகிறேன்' நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம்.

கௌதமி, வ-ம்.

அம்மா சாகுந்தள உனக்கு ஜ்வரம் தணித்திருக்கிறதா.

சாகுந்தள, வ-ம்.

ஹா! ஹா! இதோ அம்மை கௌதமி என்னை காண்பதற்காக வருகிறாள். நீர், இந்த மரக்கிளையின் கீழ் ஒளித்திரும்.

துஷ்யந்தன், வ-ம்-தனி.

இதென்ன நம்முடைய துற்பலமோ.

(சாகுந்தள, வ-ம்.) அம்மா சற்று அனுகூலந்தான்:

கௌதமி, வ-ம்.

அம்மா சாகுந்தள மந்திரம் ஜெபித்த ஜலத்தை தர்ப்ப தால் உன்மீது தெளிக்கிறேன் கொஞ்சமேனு மில்லாமல் தணித்துவிடும் நாம் ஆஸிரமத்துக்கு போகலாம் வருவாய்.

(சாகுந்தள, வ-ம்.) அப்படி வருகிறேன்.

சாகுந்தள, வ-ம்-தனி.

என் வருத்தத்தை எல்லாம் எளிதில் நீங்கிய கொடிவீடே இங்கு தானே வாழ்ந்திரு நான் மீண்டு உன்னிடத்தில் சுகாநந்தமுற்றும் வாழ்ந்திருப்பேன்.

துஷயந்தன், பாரீஸ்-தாளம்-ருபகம்.

19. அவமே எனதுசுதம் அவமே யினி
ஆரைநான் அனுப்புவேன் அவள்தன்னிடம்
ஆஹா ! யிதற் கென்ன செய்குவேன்
அரிவையும் பிரிந்தாள்
மாதாலே என்னுயிர் மாளுதே
மறப்பேனோ அவள்தன்னையே
தீதாய் முடிந்ததே தெய்வமேநான்
தெரிகிலேனென்செய்வேன் நகர்க்கேகுவேன் (அவ)

(8) தூர்வாசர்-சீன்

தூர்வாசர், வசனம.

ஆஸிரமத்தில் யார்? நான் வந்திருக்கிறது தெரியவில்லையா.

ருஷி, வ-ம்.

ஆ! ஹா! அதிதியை அவமதிக்கிறவளே. வேறு ஒன்றிலும் மனதைச் செலுத்தாமல் எவனை ஒருவனை சிந்தையில் வைத்துக் கொண்டிருக்கிறதனால் தபோநிதியாகிய நான் உன்சமீபத்தில் வந்தது உனக்குத் தெரியவில்லையோ அப்படிப்பட்டவன், கள்ளுக் குடித்து மயங்கியிருக்கிறவன் தான் முன்பேசின பேச்சைமறந்து விடுவதுபோல் நீ எவ்விதம் ஞாபகமூட்டினபோதிலும் உன் விஷயத்தை மறந்துபோகக்கடவான்!

அநுஸூயை, வ-ம்.

பிரியவதா நமது சாகுந்தலைக்கு தூர்வாசர் சாபம் குடுத்துவிட்டாரே, இதற்கு என செய்குவோம?

பிரியவதை, வ-ம்.

அநுஸூயா, அவர்கோபத்தை தணித்து தானிட்ட சாபத்தை நீக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

(அநுஸூயை, வ-ம்.) பிரியவதா சீக்கிரம்செல்லுவாய்.

பிரியவதை, வ-ம்.

சுவாமி! அவள் உம்மிடத்தில் இதற்குமுன் பக்தியாயிருந்ததை நினைத்து உம்முடைய குமாரத்தியாக பாவித்து உம்முடைய மகிமை தெரியாமல் தெரியாத்தன்மையாய் அவள் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும்.

தூர்வாசர், வ-ம்.

ஆனால், என் சாபம் பொய்யாகக்கூடாது; அடையாளமாகக் கொடுக்கப்பட்ட மோதிரத்தைக் காண்பித்தால் அந்த சாபம் நீங்கிவிடும், செல்.

அநுஸூயை, வ-ம்.

பிரியவதா, இந்த சங்கதி யாருக்கும் தெரிவிக்கக்கூடாது நம்முடைய தோழி சாகுந்தள பேதைமனதாயிருக்கிறபடியால் அவளை பாதுகாக்கவேண்டிய கடைமை.

(9) கண்வர் சீன்,

(கண்வர், வ-ம்.) அநுஸூயா பிரியவதா.

அநுஸூயை, பிரியவதை, வ-ம்.

பிதா! நமஸ்கரிக்கிறோம்.

(கண்வர், வ-ம்.) கல்யாணி.

ருஷி, -வ-ம்.

சாகுந்தலை எங்கே ஓ! நாணமிட்டுக்கொண்டு யிருக்கிறுப்போல் காண்கிறது நீ செய்த காரியம் குற்றமில்லை நான் அதிக குதோகுலமடைந்தேன் வாருவாய்.

சாகுந்தள, வ-ம். பிதா! நமஸ்கரிக்கின்றேன்.

கண்வர், வ-ம் கல்யாணி! கல்யாணி!!

(ருஷி வ-ம்) அடி குழந்தாய், ஹோமாக்கினியின் புகையால் எஜமானன் கண்ணை திரக்க முடியாம லிருந்தபோதிலும், அவன் பண்ணணி ஆஹூதியானது நல்லவேளையாய் ஹோமாக்கினியிலேயே விழுந்தது நல்ல சிஷியனுக்கு கற்றுக்கொடுத்த படிப்பைப்பற்றி ஒரு குருவுக்கு எப்படிக்கவலை நீங்கிவிடுமோ, அப்படி உன் விஷயமாக இப்போது என கவலை நீங்கிவிட்டது. இன்றையதினமே உன்னை உன்னுடைய பர்த்தாவாகிய ராஜரிஷியின் வீட்டுக்கு அனுப்பிவிடுகிறேன்.

(ருஷி, வ-ம்.) மேலும் உன்னைத் தகுந்த இடந்தேடி விவாகம் செய்துகொடுக்கவேண்டுமென்று என்மனதில் வெகுநாளாய் எண்ணமிருந்தது உன்னுடைய புண்ணியதவத்தால் உனக்குத் தகுந்த நாயகனை நீ அடைந்துவிட்டாய் என்னுடைய மனக்கவலை தீர்ந்துவிட்டது.

(ருஷி, வ-ம்.) சாகுந்தள! நீ உன்னுடைய நாயகன் வீட்டுக்குப் போன பிறகு அங்கிருக்கும் பெரியோர்களிடத்தில் ஒடுக்கவணக்கமாயிரு உன் அருமைத் தோழிமார்களிடத்தில் நடந்து கொள்வதுபோல் உன் சக்களத்திகளிடத்தில் நடந்துகொள், நாயகன் உன்னைக் கோபித்தபோதிலும், நீ கோபித்துக்கொண்டு எதிராடாதே; வேலைக்காரர்களிடத்தில் மிக்க அன்புபாராட்டு, செல்வங்களைக் கண்டு மகிட்சியடையாதே. இப்படி நடந்துகொள்ளுகிறவர்கள் தான் குலஸ்திரீகள் என்று சொல்லப்படுவார்; இதற்கு தவரி நடந்து கொள்கிறவர்களெல்லாரும் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிகாம்புகள்என்று லோகத்திலுள்ளவர்கள் நிந்திப்பார்கள் பெண்களுக்கு புத்திமதி இவ்வளவுதான் யான் தெரிவித்ததை கியாபகமாய் மனதிலவைத்துக்கொள்.

இரண்டு-தோழிகள், வ-ம்-தனி,

அநுஸூயை,

அடி பிரியவதா, அவருக்கு இந்த சமாச்சாரத்தை யார்சொல்லியிருக்கக்கூடும்.

பிரிவதை, வ-ம்.

அவர் அக்கினி ஹோத்ரசாலையில் புகுந்தபொழுது ஒரு அசரீரிவாக்கால் தெரிந்துக்கொண்டார்.

அனுஸூயை, வசனம்.

அடி பிரியவதா எனக்குச் சந்தோஷமாச்சுது, ஆனால் இந்த சந்தோஷத்தோடு நம்முடைய தோழி சாகுந்தளை தன் நாயகனிடம் போகப்போகிறாளே என்கிற விசனமும் கலந்திருக்கிறது

(பிரியவதை. வ-ம்.) அடி அனுஸூயா, நம்மிருவருடைய வருத்தத்தை எப்படியாவது போக்கிக்கொள்வோம், நம்முடைய பேதை சாகுந்தளை எப்படியாவது சுகத்தை அடையட்டும்.

கண்வர், வ-ம்.

அடே ஷிஷியா கௌதமை எங்கே இருக்கின்றாள் சீக்கிரம் அழைத்துக்கொண்டுவருவாய்.

(ஷிஷியன், வ-ம்.) அம்மா குருநாதர் அழைத்துவரச்சொன்னார்.

(கௌதமி, வ-ம்.) குருமஹாராஜா என்னை அழைத்தகாரணம்யாது.

(கண்வர், வ-ம்.) கௌதமை நமது குழந்தை சாகுந்தள இவ்விடம் நாம் வைத்து யிருப்பது கூடாது நீ அவள் நாயகனிடத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் நல்ல புத்திமதிகளை கூறி விட்டுவிடு. உங்களுக்கு துணையாக சார்ங்கரவன் சார்த்தாவ இருவரும் வருவார் அழைத்துக்கொண்டு போவாய்.

(கௌதமி, வ-ம்.) அப்படி அழைத்துச் செல்லுகிறேன்.

(கண்வர், வ-ம்.) அப்பா சார்ங்கரவா, சாகுந்தளையை துஷ்யந்த மஹாராஜாவினிடத்தில் கொண்டுபோய்விட்டு, அவனை எதிரில வைத்துக்கொண்டு, நான் தெரிவித்ததாக அவரோடு நீ பின் வருமாறு சொல்லவேண்டும்.

(கண்வர், வ-ம்.) அடே சார்ங்கரவா, அடே சார்த்தாவா நீங்கள் யிருவரும் மஹா ஜாக்கிறதையாய் அழைத்துச்செல்லுங்கள்.

(கௌதமி, வ-ம்.) சாகுந்தள உனது ஆடை ஆபரணங்களைஎல்லாம் தரித்துக்கொண்டு உனது பிதாவினிடம் சென்று விடைபெற்றுக்கொண்டு வருவாய்.

(சாகுந்தள, வ-ம்.) அப்படியே விடைபெற்றுக்கொண்டேன்.

(ஷை, வ-ம்.) அம்மணி உங்களைவிட்டு எப்படி பிரிந்திருப்பேன்!

கௌதமி, வ-ம்.

கண்மணி நீ வருத்தப்படவேண்டாம் சில நாளைக்குள் அவிடம் வந்து அழைத்து வருகிறேன் நீ வருத்தப்படவேண்டாம்.

சாகுந்தள, பாரீஸ்-தாளம்-ஆதி.

20. எனதுயிர் தோழிமாரே என் ஆவி
வருந்துதேன் செய்வேனடி

உங்களைநான் பிரிந்திடவும் காலமோ
மனதுநொந்திட வந்துநீருரைத்திட
வருந்துதென் திரேகமும் பாங்கி
மார்களைபிரியகாலமோ.

பிரியவதை, அனுஸூயை, வ-ம்.

தோழி சாகுந்தள, நீ ஏன் வருத்தப்படுகிறாய்.

சாகுந்தள, வ-ம்.

அம்மா நான் மறுபடியும் உங்களை எல்லாம் என்று காண்பேன்.

(பிரியவதை, வ-ம்) நீர் போன சிலகாலம்கழித்து பிறகு அப்பா; கண்வர் அழைத்துவருவார்.

(சாகுந்தள, வ-ம.) பிரியவதா இந்த மல்லிகைக்கொடிகளையும் இளமான் கன்றுகளையும் யான் பாதுகார்த்ததுபோல் நீங்கள் இருவரும் பாதுகாக்கவேண்டும்.

(பிரியவதை, வ-ம்.) அப்படி பாதுகார்க்கிறோம்.

சாரங்கரவன், வ-ம்.

அம்மா இதோ சூரியன் உதயகிரியிலிருந்து மார்பொழுது ஆகாயத்தில் ஏறிவிட்டான் ஆனால் சீக்கிரமாக போகலாம்.

(கௌதமி, வ-ம்.) இதோ வருகிறோம்.

(10) சீன், துஷ்யந்தன்-தர்பார்.

துஷயந்தன், டான்ஸ் பரிகள்.

இந்துஸ்தான்-தாளம்-ஆதி.

21. ராஜ ராஜ ராஜ ராஜ ரஜிகபூபனே
சொள்ளும துயனே நேயனே சுகமருகுண சூரவீரனே.
சாசினியோர்கள் பூஜிதமேவுன் காவரதிபதியே
கனமிகுநலமுறு மஹாநந்தனே காருண்யாகரனே
மாசிலாமமணி வாசவாதியே நேசமதாய்புகழ்
மங்கள யிங்கிதமாய்
புஜபலமாறு குலாதிபனே புகழதிநாயகமே
திகழொளி தாயகமே மகிழ்கொள் வாயகமே.

கண்டஜாதி-திரிபுடை-டான்ஸ்.

22. தேவேந்ரா போகேந்ரா திரிலோகா சிதப்பிரியா
ஜீவதரமான தேவமனுபாவா (தேவ)
தெரியப்புணையும் வீரஹார் சுபகுண
இடமிகுசிதமதகறு வாஹான மோஹன
சில்லீல மேல்லோல கோலாஹல (தேவ)



திகளும் சுகவைபோகவதி விதாண
திருமறைபுகளும் மதுரிதபாவிஞ யோசஞ
தீரவீர மாரசூரா பாருய் காருய். (தேவ)

சாரங்கரவன், வ-ம்.

சார்த்தவா, நாம் நகர்வந்து சேர்ந்தோம இராஜாவின் சமுகம் செல்லுவோம் அம்மா வாருங்கள்.

(சேவகன், வ-ம.) சுவாமி எவ்விடம் வசிப்பது.

(சாரங்கரவன், வ-ம்) தபோதவனம் எங்கள் குருவாகிய கண்ணுவமஹாரிஷியின் கட்டளையிட்டபடி அரசரைக் காணவந்தோம்.

(சேவன், வ-ம்.) இவ்விடமிருங்கள் மஹாராஜாவுக்கு தெரிவிக்கிறேன்.

ஷெ. வ-ம். மஹாராஜ்! வந்தனம் செய்கிறேன்.

(துஷ்யந்தன், வ-ம்.) மாதலி என்ன சந்தி ?

(சேவகன், வ-ம்.) மஹாராஜா தங்களை காணுவதற்காக தபோதவனம் கண்ணுவமஹாரிஷியின் கட்டளைப்படி இருஷிகள் வந்திருக்கிறர்.

(துஷ்யந்தன், வ-ம்.) மாதலி, அவர்களை அழைத்துக்கொண்டு வா!

(சேவகன், வ-ம்.) அப்படியே.

(ஷெ. வ-ம்.) சுவாமீ; தாங்கள் தெரிவித்தவாறு தெரிவித்தேன் அழைத்துவரச் சொன்ஞர்,

(சாரங்காரவன், வ-ம்) இதோ வருகிறோம்.

(சாகுந்தள, வ-ம்.) அம்மா, ஏன் என் கண் துடிக்கிறது.

(கௌதமி, வ-ம்.) அடி என் கண்மணி உனது பர்த்தாவின் வீட்டு குலதெய்வங்களை சிந்தனை செய்துக்கொள்.

(துஷ்யந்தன், வ-ம்.) சுவாமி; நமஸ்கரிக்கிறேன்.

(சாரங்கரவன், வ-ம்) மங்களம உண்டாகட்டும்.

(துஷ்யந்தன், வ-ம) சுவாமி, தாங்கள் எவ்விடமிருந்து வந்திருக்கிறீர்.

(சாரங்கரவன், வ-ம்.) தபோவனத்தில் வசிக்கும் எங்கள் குருவாகிய கண்ணுவமஹாரிஷி ஆக்ஞாபித்தவாரு தங்களிடம் வந்தோம் மஹாராஜா.

(துஷ்யந்தன், வ-ம்.) அவர் என்ன ஆக்ஞாபம் பண்ணி இருக்கிறர்?

சாரங்கரவன், வ-ம்.

அவருடைய பெண்ணை நீர் பரஸ்பர உமது இஷ்டத்தின்பேரில் விவாகம் பண்ணிக்கொண்டதை நான் சந்தோஷத்தோடு அங்கீகரித்திருக்கிறேன் ஏனெனில் நற்பிருப்த, நற்குண, நற்செய்கை முதலிய

யைகளோடு கூடியவர்களுக்குள் நீரோசிறந்தவர் நம்முடைய சாகுந்தலையோ நற்குணங்களெல்லாம் சேர்த்து ஒரு பெண்ணுருவெடுத்து வந்தவள்போல் இருக்கிறாள்; இப்படிச் சமானமான குணாதிசயங்களோடு கூடிய உங்களிருவரையும் சேர்த்து வைத்ததினால் பிர்மதேவருக்கு வெகுநாளாக வந்திருக்கும் "சமகுணங்களுள்ளவர்களைத் தம்பதிகளாகச் சேர்த்து வைக்காததினால் உண்டான" அபவாதம் நீங்கிற்று. ஆகையால் நீர் இப்பொழுது கர்ப்பவதியான சாகுந்தலையை உம்முடைய தர்மபத்தினியாக அங்கீகாரம்பண்ணிக்கொள்ளும்படி எங்கள் குருவாகிய கண்ணுவமஹாரிஷி தெரிவித்ததாக சொல்லச்சொன்னார்.

துஷ்யந்தன். வ-ம்,

தபோதனர்களே கண்வமஹாரிஷி ஆஸிரமத்திற்கு யான்போகவில்லையே அவருடைய ஆஸிரமம் எனக்கு தெரியவராது அவரிடம் வேறொரு அரசன் வந்திருக்கலாம் அவ்விடம் யான்விரவில்லை.

சாரங்காவன், வ-ம்.

ஐயா, தாங்கள் நாமதேயத்தை தெரிவித்து தங்கள் தர்மபத்தினியை தங்களிடம் விட்டு வருமாறு தெரிவித்தார்.

(துஷ்யந்தன், வ-ம்.) ஐயா. தாங்கள் இந்த காரியம் சொல்லுவது அடாது இதென்ன பழி!

துஷயந்தன், தர்க்கம்-பாரீஸ்-தாளம்-ஆதி.

23. ஏனோ என்மேல் பழிசுமத்துறீர்

கௌதமி—ஏதையா ராஜனே

சாரங்கர—அரியாமலே பேசுவதாகுமோ ஆஹா!

துஷ்யந்—ஏனோ என்மேல் பழிசுமத்துறீர்
இவளை எனதுமனமரியவே வனமதில்
இனிதுடன் மணம்புரிந்தேனோ
அவலமாய்சொல்லவந்தீர் வுமக்கிது சரியல்ல
அவனியில் பெரும்பழியாமே

கௌதமி—ஆகுமோ பெண்பாவம்

சாரங்கர—அரசே வுமையாவரும் கேவலமாய்ச்சொல்ல

துஷ்யந்—ஏனோ என்மேல் பழிசுமத்துறீர்
மஹாரிஷிமகளெனவுரைக்குறீர் இவளை என்
மனமது மகிழ்ந்திட நானும
தருமணம்புரிவேனோ தகுமோ வுலகினிலே
சதிசொல்ல வுமக்கிது நீதியாமோ

கௌதமி சாருமோ அபகீர்த்தி

சாரங்கர—தடைசொல்லிடாதென்று அரண்மனை சேர்த்திடா

துஷயந்தன், வ-ம்.

யான் எப்போது தபோதவனம் சென்றேன் இதென்னபழியாயிருக்கிறதே, ஏனெனாருள் இவளைத்தவனைப் பார்த்தால் மச்சினன் என்று கொண்டாடுவது வழக்கந்தான்

கௌதமி, வ-ம்.

மஹாராஜாவே, சிலவற்றைச்சொல்ல நான் பிரியப்படுகிறேன்; ஆனால் அதைச் சொல்வதற்கு அவசியமில்லை: ஏனெனில், கலியாண விஷயத்தில் நீரும் அவளுடைய பெரியோர்களை அபேட்சிக்கவில்லை; அவளும் தன் பந்துக்களோடு யோசனை பண்ணவில்லை; இப்படி உங்களிருவருக்குள்ளே நீங்கள் கலியாணத்தை முடித்துக்கொண்டபடியால், நீங்கள் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளவேண்டிய விஷயத்தைப்பற்றி நான் சொல்லவேண்டியது என்ன இருக்கிறது.

(சாகுந்தள, வ-ம்-னித.) ஆ! இதென்ன இப்போது வெருத்து பேசுகிறாரே இதென்ன காரணம் தெரியவில்லையே.

சாரங்கரவன், வ-ம்.

ஐயா. நீர் உலகஞாயத்தை நன்றாய் அறிந்திருக்கிறீர், யெவ்வளமுடைய ஒரு பெண் பதிவிரதையாயிருந்தாலும், கணவனிருக்கும்பொழுது தன் பந்துக்கள் வீட்டிலேயே முழுவதும் இருந்தால், உலகத்தார் அதனைப்பற்றி வேறுவிதமாய் நினைபபது வழக்கமல்லவா? ஆகையால், அவள் தன் நாயகனுக்கு வேண்டாதவளாக இருந்தபோதிலும் அவள் பந்துக்கள் அந்தப்பெண் தன் நாயகன் சமீபத்திலே இருக்கவேண்டுமென்று விரும்புகிறது உமக்குத் தெரிந்திருக்கிறது.

துஷ்யந்தன், வ-ம. இந்த அம்மாளை யான் கலியாணம் பண்ணி இருக்கிறேனா?

சாகுந்தள, வ-ம. ஓ! மனமே நீ திடங்கொள் இன்னம் என்ன தெரிவிக்கிறாரோ பார்ப்போம்.

சாரங்காவன், வ-ம. ஐயா. செய்த காரியத்தை ஏன் நிராகரிக்கிறீர்? ஏன் தர்மத்துக்கு விரோதம் பண்ணுகிறீர்? ஏன் எங்களை அவமதிக்கிறீர்?

துஷ்யந்தன், வ-ம்) ஐயா, இல்லாதகாரியத்தை கல்பனைசெய்துக்கொண்டு இவ்வித வார்த்தை தெரிவிக்கிறது அடாது

சாரங்காவன், வ-ம்.) இராஜ்யாதிகாரித்யத்தினால் செருக்கடைந்தவர்களுக்கு அநேகமாய் புத்திமாறுதல் உண்டாவது வழக்கந்தான்.

துஷ்யந்தன், வ-ம்.

என்னை நீர் மிகவும் கடிந்து பேசுவது என்னலாபம்.

கௌதமி, வ-ம்.

என் கண்மணியே, சற்று நேரம் லஜ்ஜைப்படாமலிரு; உன்னுடைய முக்காட்டை எடுத்துவிடு; அப்பொழுதாவது உன்நாயகனானவர் உன்னை இன்னாரென்று தெரிந்துக்கொள்வார்.

சாரங்கரவன், வ-ம்.

ஐயா, இதற்கா தாங்கள் தற்கம்செய்வதில் பயனென்ன? எங்கள் குருவின் உத்திரவை நிறைவேற்றிவிட்டோம்; இதோ நாங்கள் புரப்பட்டுப்போகிறோம். உம்முடைய தர்மபத்தினி இதோ இருக்கிறாள்; இவளை நீர்சேர்த்துக்கொண்டாலும் சரி அல்லது தள்ளிவிட்டாலும் சரி ஒரு பர்த்தாவானவன் தன் பத்தினியினிடத்தில் தன்னிஷ்டப்படி நடந்துகொள்ளலா மல்லவா? பிரகு உமது இஷ்டம் நாங்கள் போகிறோம்.

(ஷை, வ-ம். அம்மா யாங்கள் போகிறோம்.

சாகுந்தள. இந்துஸ்தான்-தாளம்-ரூபகம்.

24. எந்தனைவிட்டுப் போறீரோ
என்செய்வே னென்தோழமாரே
இதுவுமென் தலைவிதியாமோ காணேன்-தெய்வமே

நிந்தனைப்பேசும் மன்னனிடம்
நீங்கள்விட்டுப் போயினால்
நீக்குவாரென்னைச் சபையைவிட்டு பல
சாக்குகள்சொல்லி யிந்தக்ஷணமே (எந்த)

இதற்குத்தானோ நமதுதந்தை
வுங்கள்பின் னனுப்பினார்
எல்லாம் முன்பாகமே கண்டிருந்தும்
எனைவிடுத்துப் போறீரோ. (எந்த)

சாகுந்தள, வ-ம்,

அம்மா, தங்கள் முன்பாகவே என்னை வெருத்துவிட்டார் இப்போது நீர் என்னை தனிமையாய் விட்டு போறீர்களே.

கௌதமி, இந்துஸ்தான்-தாளம்-ஆதி.

25. என்செய்யலாம் சாகுந்தள-நீ
இன்னம் பொருப்பாய்
நானேகுறே னாசிர்மத்திற்கே
ஏங்கிவாடாதே (என்)

முன் அய்யன்செயலாமேயிது
முற்றும் உற்றுபாரே
வல்லினையோ காணேனையோ
மங்கைபிதற் (கென்)

வுன்கணவன் பாதம் வுற்றதுணையே
என்றுநீ கொண்டாடி வாழ்வாய்
எகுறேனிதற் (கென்)

(கௌதமி, வ-ம்) கண்மணி சாகுந்தள யாங்கள் போய்வருகிறோம்.

(சாகுந்தள, வ-ம்.) அம்மா போய்வாருங்கள்.

(ஷை, வ-ம்.) ஐயோ, இவர்கள் தனிமையாய் விட்டு போய்விட்டாரே யான் என்செய்வேன் இந்த அரசனும் வெருத்துயிருக்கிறாரே தெய்வமே.

சாகுந்தள, தர்க்கம்-கஜல்-தாளம்-ஆதி.

26. சாமிஎன்னை வெறுப்பது சரியல்லவே. (சாமி)

பூமிஎல்லாம் பெரும்புகழ்கொளும் அதிபதி
பெருமையிலுயர் தவமதியே (சாமி)

ஏதோநீரென்னை பலமொழியினால் மாசபைதனை
விடுத்தேகச் சொல்குறீர் (சாமி)

உந்தனுக்கிது மரியாதையோ அரசே
ஏதையாவாதுகள் இனிமேல் (சாமி)

சாகுந்தள, வ-ம்.

தங்கள் பத்தினியை யிப்படி அலரச்செய்வது நீதியா?

துஷ்யந்தன், வ-ம்.

சீ! கெர்வி சபையைவிட்டுசெல் எப்படியாகிலும் வசப்படுத்திக் கொள்ளலாமென்று நினைக்கின்றனை உன்னுடைய பசபசப்பு ஒன்றும் செல்லாது விலக்கிப்போ.

தூகர்ஜேஜாகர்ஜே-ஜா-என்ற-வர்னமெட்டு.

துஷ்யந்தன், தரு-தாளம்-ஆதி.

27. சீ! விலகிபோ விலகிபோ விலகிபோவாய்
வீரமாகவே கொடியாள் வாதுகளாட
வைரியோ நீ வந்தனை (சீ! வில)

வெரும் வார்த்தைகள் அரிவிலையோ
அரிவிலையோ அரிவிலையோ-நீ
மாசபையிலே வுன் மாயவித்தைகளொன்றும்சொல்லாதே
வாயாடாதே கெர்வியே சீ! கெர்வியே சீ!!
கெர்வியே சீ!!! (சீ! வில)

மாதே நீ வீணுகவம்பு வார்த்தைகள் பேசி மயக்கினால்
ஏதோனும் இணங்குவனோ இணங்குவனோ
இணங்குவேனோ (சீ! வில)

(சாகுந்தள, வ-ம்.) ஆ! என் விதிப்பயனோ அல்லது ஆரிட்ட சாபமோ தெரியவில்லையே.

சாகுந்தள, தரு பாரீஸ தாளம்-ரூபகம்.

28. தெய்வமே யிதற்கோநான்
பெண்ணாய்பிறந்தேன் (தெய்)
சிறியவளென்னைக் காப்போராரோ
தெரியே னென்செய்வே னையோ
செய்வே னையோ செய்வே னையோ
திருச்செயல்தானோ (தெய்)

செய்வதேன் யானே யிதற்கு
சூட்சியொன்றறியேனே தீங்குநேர்ந்ததே
தீங்குநேர்ந்ததே தீங்குநேர்ந்ததே
செப்பியமன்னன் வார்த்தைக்கேட்டு
தெரியாமல் மோசம்போனேன் மோசம்போனேன்
மோசம்போனேன் திகைத்திடலாச்சே (தெய்)

மன்னவா சோலையிலென்னை
வருந்திநீர் மோகித்ததை
மறந்துவிட்டீரோ மறந்துவிட்டீரோ
மறந்துவிட்டீரோ
மங்கையேயுன்னை தீவிரமாக
அழைப்பேனென் றுரைத்தீரையோ வுரைத்தீரையோ
வுரைத்தீரையோ வுன்
மனமிரங்காதோ (தெய்)

சாகுந்தள, வ-ம்.

தெய்வமே இதற்குதானோ பெண்ணாய்ப் பிறந்தேன் ஐயோ! இவ்வரசன் என்னை முற்றும் மறந்தாப்போல் காணுகிறதே நான் இந்த சமயத்தில் என்செய்வேன் என்னுடன் வந்தவர்களும் என்னை தனியே விட்டு போய்விட்டார்கள். அரசனோ என்னை அயலான் தாரமென்றல்லவா எண்ணுகிறார் இதோ வும்முடையசந்தேகத்தை இந்தஅடையாளத்தைக்காட்டி எளிதில் வுமக்கு நினைவூட்டுகிறேன்பாரும்.

துஷ்யந்தன்-வ-ம். சபாஷ் அப்படியிருந்தால் தடையில்லாமல் சந்தோஷமாக தெரிவிக்கலாம்.

சாகுந்தள-வ-ம்.

ஐயோ ! என் செய்குவேன் மோதிரமோ எங்கே நழுவி விழுந்துவிட்டதே இனி எப்படி இவரை அடைவது.

(துஷ்யந்தன், வ-ம்.) ஸ்திரீகளுக்கு சமயோசிதமாய் யுக்திகள் தோன்றுமென்பதற்கு நல்ல திருஷ்டாந்தரம் இதுதான்.

(சாகுந்தள. வ-ம்.) இது தெய்வ செயலன்றி வேறில்லை வுமக்கு நம்பிக்கை யிருக்கும்படி மற்றோர் அடையாளம் சொல்லுகிறேன் கேளும்.

(துஷ்யந்தன், வ-ம்,) அப்படியே ! தாளரமாய் சொல்.

சாகுந்தள. வ-ம்.

ஒரு நாள் நீரும் நானுமாக மல்லிகைகொடி வீட்டிலிருக்கையில் தாமரையிலை தொன்னையில் நீர் தண்ணீரைவைத்திருந்தீர் நான் பிள்ளையைப்போல கருதி வளர்த்த அழகிய மான் குட்டியானது அங்கே ஓடிவந்தது அப்பொழுது நீர் தாகத்திற்குக் குடிப்பதற்கு அந்தமானுக்கு நீர் அருந்தும்படி தெரிவித்தீர் அம்மான் உமது கையினின்றும் அருந்தவில்லை வுடனே நான் அதை வாங்கிக்கொடுக்கவே அம்மான்குட்டியானது அச்சமுற்று குடித்ததுஅப்பொழுது நீர் என்னை பார்த்து பரிகாசமாய் எந்த செந்துவும் தன் இனத்தை சாருகிறது நீங்கள் இருவரும் காட்டில் வாசஞ்செய்கிறவர்களாகையால்ஒருவரை ஒருவர் நம்புகிறீர்கள்என்றீரே அதையிப்பொழுதுமருந்துவிட்டீரே.

துஷ்யந்தன் வ-ம்.

இதென்னஆச்சரியமாய் யிருக்கிறது அவ்விடம் யான் எப்போது வந்தேன் உந்தன் மான்குட்டியை கண்டேனோ; அல்லது உந்தனைப் பார்த்தேனோ இதென்ன பழியாய் யிருக்கிறது.

துஷயந்தன், தரு-பாரீஸ்–தர்க்கம்.

29. கூறுகெட்டமாதேயிதை விட்டுசெல்லடி
கோதுடையபேதாய் மிருதுவாய்வினோதமாகவே
பேசாதே விலகிசெல்லடி

சாகுந்தள.

யாரோ எவரோ என்றனை யிடைவிடா தேசுநீர்
யாராருமக்கென்ன போதித்த போதனையோதான்

துஷ்யந்தன்.

விலகிசெல்லடி மாதருக்குள் நீயும்ஒரு
கெட்டிதானடி சூதுக்கொருவித்தாய்
யுதித்தாய் மாயத்தால்பேசாதே நிர்மூடி
விலகி செல்லடி (கூறு)

சாகுந்தள.

நாதா அன்றுநீர் வனமதில் நயந்தெனை மணர்ந்ததை
ஏதோகாரணத்தினால் மறந்தனை சஹா

துஷ்யந்தன்.

பொய்சொல்லாதடி நீ பெண்களிலே
நீயும்ஒரு கெட்டிதானடி
சூதுக்கொரு வித்தாயுதித்தாய் (கூறு)

B
0-1592
N16
183430

(துஷ்யந்தன், வ-ம்.) மஹா கெட்டிக்காரி பெண்டுகள் யிருந்தால் உன்னைப்போல் யிருக்கவேண்டும்.

(சாகுந்தள, வ-ம்.) நாதா ஒருகாலம் பொய்சொல்லமாட்டேன்.

துஷ்யந்தன், பாரீஸ்-தாளம்-ஆதி.

30. என்னையும்வுன் ஞாதனென ஓதும்ன்றனே
சாகுந்—இதுசரியோ எந்தன்விதியோ ஏழில்துரையே கார்
துஷ் —ஏன் வீணாக
சாகுந்—இன்பனே வம்புகள் என்னிடமாகாதே
துஷ் —வம்புசெய்ய வருகின்றனே (எனை)
சாகுந்—மனம் சோதிப்பாய் என்னரசே நீ எனைவெறுப்பதால்
துஷ் —வாதே யிப்போதே
சாகுந் —மன்னவா பின்னரும் சின்னலெனவரும்
துஷ் —ஏங்கிநின்று வாடுகின்றனே

(துஷ்யந்தன், வ-ம்.) உன்னுடைய சாமார்த்தியம் இவிடம் செல்லாது பிழைக்கும் வழிசெல்லு.

சாகுந்தள, வ-ம்.

தெய்வமே இதற்கு என்ன செய்யப்போகிறேன். நான் கபடமற்ற நெஞ்சத்தவளாய் வாயில் தேன்வொழுகிற வார்த்தையையும் அகத்தில் படுவிஷயத்தையுடைய இந்த அரசநானவர் புருவ வம்ஸத்தில் பிரந்துயிருக்கிறார் என்று நம்பி மணர்ந்து ஐயோ பாவி யிக்கோலமானேன்.

துஷயந்தன், தூநில்-என்ற-வர்னமெட்டு.

31. என்னடி என்னடி அரிய சபையில் கரையத்தகுமோ
சொல்லடி சொல்லடி சொல்லடி பலருமறிய
சாகுந்—முன் சொன்னேனே இனி
துஷ் —சொல்லு ரதியோ
சாகுந் —உன்மை சேர்ந்ததும்
துஷ் —அடடா இவளைப்போல் வுலகில்கொடிய சிருமி
இனிமேல் எவரைச்சொல்வேன்
சாகுந்—ஆகுமோ எனை நீக்குவதும் தாமே மணர்ந்துமிப்படி
துஷ் —எண்ணினால் சேர்ப்பேனோ (என்)

சாகுந்தள், வ-ம்.

ஓ! மனதே நீ திடங்கொள் விதியை வெல்லப்போமா.

சாகுந்தள, பாரீஸ்-தாளம்-ஆதி.

32. மன்னா என்னைநீர்விட யார்மாயமோஎன்கர்மமோ
வுண்மையே யானும் மனையாளென்பதும்
வுறுதியாய்நம்புவீர் மன்னா மொழிநீ
சொல்லிஎன்னையும் ஓட்டச்செய்யாதீர் (மன்னா)

என்னநான்சொல்லியும் கேளேனென்
குறீர் ஏதோ என்பாவமோ
இன்றேஎனை இவ்வாளால்
நறுக்கினாலும் புகழாகுமே (மன்னா)

துஷ்யந்தன், வ-ம்,

புரோகிதரே யான் சொல்வதை கவனியுங்கள்

(புரோகிதர், வ-ம்) அப்படியே மஹாராஜா.

துஷ்யந்தன், வ-ம்.

ஐயா, நான் இவளைக்கலியாணம் பண்ணிக்கொண்டதை மறந்திருக்கலாம். அல்லது இவள் ஒரு சமயம் பொய் சொல்லலாம், இவ்விரண்டும் சம்பவிக்கக்கூடியதுதான் நான் கலியாணம் பண்ணி மறந்திருக்கிறது வாஸ்தவமாயிருந்தால், பத்னியைக் கைவிட்டதோஷம் சம்பவிக்கிறது; அல்லது இவள்பேச்சுப் பொய்யாகயிருந்தால் எனக்கு பரஸ்திரீக மனஸ்தாபம் உண்டாகிறது இவ்விருவித தோஷங்களிலும் எது பெரிது, புரோகிதர் நீங்கள் தெரிவிக்கவேண்டும்.

புரோகிதர், வ-ம்.

மஹாராஜா யான் தெரிவிக்கிறதை கவனிக்கவேண்டும்.

(துஷ்யந்தன், வ-ம்.) தெரிவிக்கவேண்டும்.

புரோகிதர், வ-ம்.

மஹாராஜா ஒரு ஸ்திரீ பாதவிக்கும்போது நாம் நிராகரிக்கக்கூடாமை அப்படி யிருக்கையில இந்தஸ்திரீ பிரஸவிக்கும் வரையில் என் வீட்டிலேயே இருக்கட்டும்; நான் ஏன் அப்படிச் சொல்லுகிறேனென்று நீர் கேட்டால், முதல் முதல் உமக்குச் சக்கரவர்த்தியான பிள்ளை பிறக்குமென்று பெரியோர்கள் ஏற்கனவே ஆசீர்வாதம் பண்ணியிருக்கிறார்களல்லவா? இந்தஇருஷிப்பெண்ணுக்கு பிறக்கப்போகிற பிள்ளை சக்கரவர்த்தி அடையாளங்களோடு கூடியிருக்குமேயானால், நீர் இவளுடைய குணததைச் சிலாகித்து இவளை அந்தப்புரத்தில் வைத்துக்கொள்ளலாம்; இதற்கு விரோதமாய் நடந்திருந்தால் அவள் தகப்பனார் வீட்டுகருத் தானே திரும்பிப்போகிறாள்.

துஷ்யந்தன், வ-ம்.

புரோகிதரே நீங்கள் சொல்வது நல்ல யோசனைதான் தாங்கள் அந்த ஸ்திரீயை அழைத்துச்செல்லுங்கள்.

(புரோகிதர், வ-ம்.) மஹாராஜா அப்படியே அழைத்துச்செல்லுகிறேன், படிச்சிலவு தேவையாயிருக்கிறது.

(துஷ்யந்தன், வ-ம்.) புரோகிதர் தாங்கள் அந்தப்புரம் செல்லுங்கள் யான் சேவகனிடம் அனுப்புறேன்.



(புரோகிதர், வ-ம்.) அம்மா என் பின்பற்றி வாருங்கள்.
(சாகுந்தள, வ-ம்.) சுவாமி அப்படியே வருகிறேன்.
(மாதலி, வ-ம்.) மஹாராஜ்! மாதலி வந்தனம் செய்கிறேன்.
(துஷ்யந்தன், வ-ம்.) மாதலி என்ன சங்கதி.
(மாதலி, வ-ம்.) தேவேந்திரா உம்மை அழைத்துவரச்சொன்னர்.
(துஷ்யந்தன், வ-ம்.) மாதலி யான் வருவதாய் தெரிவிப்பாய்.
(மாதலி, வ-ம்.) அப்படியே யான்போய் தெரிவிக்கிறேன்.

துஷ்யந்தன். வ-ம்.

மாடவியா, தேவேந்திரன் அழைப்பதாய் மாதலி தெரிவித்து போனன் யாம் அந்தப்புரம் செல்லுவோம்.

(11) செம்படவன், சீன்.

(செட்டி, வ-ம்.) கடைவைத்து விட்டோம் ஒருவரையும் காணோம் நாராயணன் செயல்.

(ஷை வ-ம்) அடே. பையா நேற்றையதினம் வாங்கின வெள்ளிக்கட்டி எங்கேவைத்திருக்கிருய்?

பையன், வ-ம்.

அந்த பெட்டியில்தாண்டா யிருக்கிறது செட்டியாரே!

செட்டி, வ-ம்.

அடே, பையா யாராகிலும் வருகிறுர்களா பாரடா?

பையன், வ-ம்.

ஐயா, செட்டியாரே; யாரோ ஒரு செம்படவன் நமது கடைக்கி எதிராக ஓடிவருகிருன்.

செம்படவன்,

ஐசாகர்ணைவசாகர்ண-வர்னமெட்டு.

33. காட்டினில்பாக்கியசாலி யிந்த
மோதிரத்தால்நான் காணுவேன்
மேட்டியாமிதைவிட்டினி என்நர்மக்களும்
மாதோடேகுவேன்
மன்னவரிதனை கேட்கினும்
மற்றவராயினுமோரி
வாகாய்வாங்கிட மாதர்களாயினும்
வாரீர்ரிந்தப்போதய்யா (நான்)

ஷை, -வ-ம்.

இந்த மோதிரம் நமக்கு பிரயோசனமென்ன இந்த செட்டியிடத்தில் தந்துவிட்டு ரூபாய் வாங்கிப்போகலாம்.

செம்படவன்.

ஹாயிமேசீமேபகார்-என்ற-வர்னமெட்டு.

34. பாரையா செட்டியாரே இம்மோதிரத்தை (பா)
பாரையாநீ பார்த்திதற்காக
பணம்தாதாசல்தி பரிந்து இதை (பா)
சரியாக நீ மதிப்பெடுத்து
பொருள்தருவாய் போரேனினி (பா)
அருமையான வைரமிதாமே
அன்பாக நீ பொன்தாருமோ (பா)

செம்படவன், வ-ம்.

ஐயா, செட்டியாரே! செட்டியாரே! பணம் வாணும் கருங்கல்லோட்டு மோதிரத்தை தேச்சிக்கொள்ரே மோதிரத்தை குடுத்துவிடடா.

செட்டி, வ-ம்.

உரைபோட்டு பார்க்கவேண்டாமடா.

சேவகர், பாரீஸ்-தரு-தாளம்-ஆதி.

35. பிடிபிடி இவனை நமது அரசன்
முன்னிலைகொண்டேகுவோம்
அடிஅடிமுதுவைப் பிளவ வுதிரம்பாயவே
ஆரிடம் திருடினாய்
அதை எமக்கரியச்சொல்லடா
வுனைவிடுவோ மன்பாகவே
இல்லாவிடில் வுனதுயிரைபரிப்போ
மிக்கணமே நாங்களும் (பிடி)

செம்படவன், தர்க்கம்.

ஐப்தக்கலந்தரு-என்ற-வர்னமெட்டு,

36. எந்தனைதொந்தரை செய்யவும் சரியல்லா
வந்தனம்செய்கிறேன் ஐயாவே
ஏறியிலேபோய் வலையது வீசையிலே
அன்றிது மீனுலானது
சேவ— வுனக்காக்கினை வந்து நேரிடுமடா
வுண்மையாக சொல்
செம்ப—வுண்மையிதுபொய்யல்லவே சேவகரேகேள்
எந்தன்தெய்வமீதிலானை ஏற்றுக்கொள்வீரே
சேவ —நீ வுக்கிரமாகபேசாதடா வுந்தனைவிடோமே

சேவகள், வ-ம்.

அண்ணே இவனை அரசனிடத்தில் கொண்டுபோவோம்.

செம்படவன், தர்க்கம்.

ஐசாகர்ஞவைசாகர்ஞ-என்ற-வர்னமெட்டு.

37. அய்யா இனிமேல் என்செய்வீர்கள்
அன்பாய்அரசன் தயவுடனே

சேவகன்,

அஹா! அண்ணே செம்படப்பயலே
ஏமாத்திநாம் பொருள்பரிப்போம்

செம்படவன்,

பணமதுதந்தால் விரைவுடன்செல்வீர்
பலவாறென்னை ஏசாதீர்

சேவகன்,

செய்தபிழைகளை பொருத்தருள்வாய்
தீங்குநாம் நினைக்கோமே

செம்படவன்,

ஜிலேப்பிவாங்கிநான் தின்னப்போறேனே
சலாம்வருதையா சாரியம்குடிப்பேனே

சேவகன்,

போகாதடாநீ பொருள்தாருமலேநீ
போனல்விடுவேனோ புத்திகெட்டவனே

செம்படவன்,

அடேபோடாபோடா மடையர்களே.

(12) காடு - சீன்.

துஷயந்தன் - தரு,

இலமிலரும்-என்ற-வர்னமெட்டு.

38. எனதுயிர்த் தோழா என்செய்வேன்
ஏங்கிஏங்கி பலவிதமாக மெய்வாடுதடா
செய்வகையேன் வுய்வகையேன் மனைவியை
விடுத்தேன் வாழுவோ (என)
ஆருயிர்க்காதலி ஏசிடா ரென்முன்
அழைத்துவரவு மிடைவிடாது
அற்பமாய் ஏசிகைவீசியே அதட்டிதுரத்தி
யிடைவிடாது அழுதுக்கைமேற்பதாச்சி
தரஅரிய சன்பயோரரியவேதான் (என)

துஷ்யந்தன, வ-ம்.

அடே தோழா சாகுந்தளையோடு நான் முந்திச் செய்த நடவடிக்கை யெல்லாம் எனக்கு இப்பொழுது ஞாபகத்தில் வருகிறது! அவள் சங்கதி யெல்லாம் நான் உனக்கு சொல்லியிருக்கிறேனே



அவளை நான் விடுதலைசெய்யுங் காலத்தில் நீ அருகிலில்லாமல்போய் விட்டாயே அல்லது நாம்பேசிக்கொண்டிருந்த பொழுதாவது நீ அந்த மஹாஅனுபாவையின் பெயரைச்சொல்லவே இல்லையே என்னைப் போல நீயும் அவளை மறந்துவிட்டாயே.

மாடவியன், வ-ம்.

நான் மறக்கவில்லை! ஆனால் நீர் எல்லாவற்றையும் சொல்லிவிட்டு முடிவில் இதெல்லாம் பரிகாசவார்த்தை. இதை வாஸ்தவமென்று நம்பாதே என்றுசொன்னீர் என்புத்தி கழுதைபுத்தியானபடியால் நானும் நீர் சொன்னதை அப்படியே நம்பிவிட்டேன் என்பேரில் வருத்தப்படுவதில் பயனென்ன.

துஷ்யந்தன், வ-ம்.

சிநேகிதா, காரணமில்லாமல், என் பிரிய சாகுந்தலையைத் தள்ளி விட்டு அவளுக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணினதை நினைத்துப் பார்க்க எனக்கு துக்கம் தலைகொண்டுபோகுது நான் சேர்த்துக்கொள் ளமாட்டேனென்று தள்ளிவிட்டதன்பேரில், தன் பந்துக்கள் பின் னேடு போக அவள் எத்தனித்தபொழுது தன் தகப்பனுக்குச் சமா னமான தன்னை அழைத்துவந்த இருஷி இங்கே வரு என்று தெரி விக்க கண்ணீரை தாரை தாரையாகப் பெருகவிட்டுக்கொண்டு கல்ம னதான என்னை அவள் விரைத்துப்பார்த்த பார்வையானது விஷம் தடவின சல்லியமென்னும் பாணம்போய் என் மனதை இன்னமும் தகித்துக்கொண்டிருக்கிறது.

துஷ்யந்தன், பாரீஸ்-தாளம்-ஆதி.

39. மங்கைஎன்னைப் பிரிந்தேகினளே
மதியே ஊடலதுதனியாதே-மட (மங்)
மாதாலே மெய்வாடுதே
மானேவுனைக் கண்தேடுதே
மாவனம்காமியாய் எங்கேனும்-மட (மங்)
மாதர்களோடு சேர்வேனோ
மறைவாகவே தங்கியிருந்தேனோ-மட (மங்)
எதினிவரமுடியா தாகையாலே
யான் தாளேனே
வுரைக்கேனே-மட (மங்)

துஷ்யந்தன், வ-ம

சிநேகிதா, நான் அவளைக் கண்டு பேசி அனுபவித்ததுமுதலான தெல்லாம் தெய்வலோகமோ, அல்லது இந்திர ஜாலவித்தையோ, அல்லது என் புத்திமாராட்டமோ, அல்லது பூர்வஜென்மத்தின் நற் கருமபலன் அவ்வளவோடு முடிந்துவிட்டதோ! எப்படியிருந்தாலும் சரி, அது நம்மைவிட்டுப் போனபிறகு திரும்பிவரப்போகிறதில்லை ஆனால் என் நினைவுகள்மாத்திரம் கரைகடந்து இருக்கிறது.

மாடவியன், வ-ம்.

ஐயா, நீர் இந்த வார்த்தைச்சொல்லவேண்டாம் உமக்குக்கிடைகவேண்டியதாகவே வருமென்பதற்கு இந்தமோதிரமே ஒரு திருஷ்டாந்தமாகவே இருக்கிறது,

துஷ்யந்தன், வ-ம்.

தனக்கு இலகுவில் கிடைக்கத்தகாத இடத்திலிருந்து நழுவிவிழுந்த இந்த மோதிரத்தைப் பார்த்தால், ஐயோ வருத்தமாயிருக்கிறதே! ஓ மோதிரமே, அழகிய நகங்களோடு கூடி சிவந்த அவள் விரலை நீ ஒருதரம் அடைந்து பிறகு அதிலிருந்து நீ நழுவியிருக்கிறதைப்பார்த்தால், உன்னுடைய தவப்பலமும் என்னுடைய நற்பலனும் அதிக துற்பலமென்றே சொல்லவேண்டும்.

(மாடவியன், வ-ம்.) பெயர் எழுதியிருக்கும் இந்த மோதிரத்தை அவள் கையில் என்னகாரணத்திற்காக போட்டீர்?

(துஷ்யந்தன், வ-ம்.) யான் தெரிவித்துக்கொண்டுவாரேன் கவனிப்பாய், நான் வனத்தைவிட்டு ராஜ்யத்திற்குத் திரும்பிவரும்பொழுது, பிரிய சகி சாகுந்தலை என்னைத்தடுத்து இன்னும் எத்தனைநாளில் நீங்கள் என்னை அழைத்துப்போவீர் என்று கண்ணீர்கலங்க, பிறகு இந்தமோதிரத்தை அவள் விரலில்போட்டு அடி பிரியசகி, இம்மோதிரத்தில் வெட்டப்பட்டிருக்கிற என் பெயரை தினம் ஒரு எழுத்தாக எண்ணிக்கொண்டுவா, அந்த எழுத்தையெல்லாம் நீ எண்ணி முடிப்பதற்குள் என்னிடமிருந்து சேனைத்தலைவருவார் உன்னை என்னுடைய இராஜயத்திற்கு அழைத்துக்கொண்டு போகவருவார் என்று தெரிவித்தேன். கபடமானது எனக்கு நேர்ந்த புத்தியால் யான் தெரிவித்தவார்த்தை தவறிவிட்டேன்.

துஷ்யந்தன், வ-ம்.

சிநேகிதா என் நாயகியை எப்போது காண்பேன் என் மனமெல்லாம் அவள் மீது நாடுதே.

மாடவியன், வ-ம.

ஐயா நீர் வருத்தப்படவேண்டாம் நாம் செல்லும்வழியில் பார்த்துக்கொண்டு போகலாம்

துஷ்யந்தன், இந்துஸ்தான்-தாளம்-சாப்பு.

40. ஏதுசெய்வேன் நாயகியை எங்குதேடுவேன்
 உகோஎன்னுயிர்மாடவியா அறியாமற்போனேனே.
 சாகுந்தலையை யான்பிரிந்து தனியனானேனே (ஏது)
நானகவந்தமாதை நானும் தடுத்துபேசினேன்
தபசியர்கள்சொன்ன வார்த்தையைநான்
தள்ளிவிட்டேனே (ஏது)



துஷ்யந்தன். வ-ம்.

மாடவியா இந்த வனத்தில் யாரோ ஸ்திரீ சஞ்சாரம் செய்கிறார்கள் யாம் அவ்விடம் போகலாம்.

(13) சர்வதம-சீன்

பாலன், வ ம.

ஓ சிங்கக்குட்டியே, வுன் வாயைத்திற, உனக்கு எத்தனை பற்களிருக்கிறதென்று யான் பார்க்கிறேன்.

இருஷிஸ்திரீ, வ-ம்.

அடே ஸர்வதமனா, நீ சிங்குக்குட்டியை விட்டுவிடுவாய் இதன் தாய் வந்தால் உன்பேரில் எதிற்கும்.

பாலன், வ-ம்.

அதன் தாய்வந்தாலும் நான் அஞ்சமாட்டேன்.

துஷ்யந்தன் வ-ம்.

இந்த பிள்ளை யாரோ தெரியவில்லை மாடவியா பிள்ளையைப்பெறாத மலடிக்கே இந்த பிள்ளையின்பேரில் இவ்வளவு பிரியம் இருக்கும் போது, பிள்ளையைப்பெற்றவர்க்கு என்னவிதமா யிருப்பார்கள்.

இருஷிஸ்திரீ, வ-ம்,

அய்யா இந்த சிங்கக்குட்டியி னிடத்தில் விளையாடும் பாலனை யெடுத்துப்போவதற்கு எனக்காக சற்று துணையிருப்பீர்களா ?

(துஷ்யந்தன், வ-ம்.) சற்குணமுள்ள இருஷிக்குமாரனே யேன் அந்த ஜந்துவை வதைசெய்கிறாய் ?

(இருஷிஸ்திரீ, வ-ம்.) அய்யா, இருஷிக்குமாரனல்ல.

(துஷ்யந்தன், வ-ம்.) பின்ன யார் ?

(இருஷிஸ்திரீ, வ-ம்.) மரபின் மரபில்வுதித்தவன்.

(துஷ்யந்தன், வ-ம்.) மரபின் மரபில்வுதித்தவனா; ஆனால் ஏன் இவ்விடத்தில் இருக்கவேண்டும் ஆனால வருவாயடா கண்மணி.

பாலன், வ-ம்.

நீ யார் ; துஷ்யந்த மஹாராஜனல்லவோ எனக்கு தந்தை.

(துஷ்யந்தன், வ-ம்.) யான் தான் வுன்தந்தை.

(இருஷிஸ்திரீ, வ-ம்.) அம்மா இவர்தானா தங்கள் நாதன் ;

துஷ்யந்தன், சாகுந்தள, தரு.

ஷாகேவாலா-என்ற-வர்னமெட்டு.

41. மாதேநானும் ஏதோஎன்
மதிமயங்கியுனை மறந்தேனே.



சாகுந்தள.

மௌனமாய்எனதுடன் வாதாடி
மறந்தீரோ பிரிந்தீரோ எனையும்
மனையாளென்றும் பாருமல்.

துஷயந்தன்.

எதார்த்தமானே அன்றுன்னோ
டெதிர்சபையேமுன் வாதாடி
ஏசச்செய்தேன் மாமயிலே
ஏதோ-யார்-சூதோ பொல்லாதோ-சொல்லாதோ
இனி மனமுருகியேவாடாதே.

சாகுந்தள.

இதுமுனம் எனதரும் தலைதனிலெழுதிய
விதிவசமுமையினி குறைசொல்லசரியல்ல

துஷ்யந்தன், வ-ம்.

பெண்ணே நமது இராஜ்யம் செல்லுவோம் வருவாய்.

துஷ்யந்தன் சபை டான்ஸ்

சோகப்பியாரே-ரங்கராஸியா-என்ற-வர்னமெட்டு.

42. சீலசுகுணபதி ய க்ருபநிதியே
ஸ்ரீ கருணாவதியே
பணிந்தனம் சேவடி யித்ததியே
சுகுணதேவ சுகிர்தநாவ சுசீல்துரையே காரா
சுகசுகமதிமேவும் மதனமார் சீலலோலமணாளா
சூராவீரா ஸ்ருங்காரனே
தாதாகிடதக தைதைதைய்யா
ஜெகராஜர்மேவும்மணியே
பலமாதர்சூழுங் கனியே
துஷ்யந்திர பூபாலா-ஸ்ரீ

டான்ஸ், தாளம்-ஆதி.

43. மாராளங்களைக்கார்த்திடும் மஹானுபாவா
தேவாதேவா பணிந்தோம்
தீராளங்களைகார்த்திடும் துஷ்யந்திரபூபா
பாவாபாவா பணிந்தோம்
நருமலரையணியும் நாரியர்சிகாமணியே
பருவமுள்ளராணிக்கு பாங்கானகனியே
வாழிவாழி எல்லோரும்
சேர்ந்திவெல்லோருங் கூடி
பாரீஸ்சாகுந்தள சம்பூரணம்.

183430